# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, நவம்பர் 09, 2018. இதழ் - 38







### மட்டு மாநகர சபையின் அனர்த்த கால முன் ஆயத்தக்குழு

கிழக்கு மாகாணத்தில் கடுமையான மழை பெய்து வரும் நிலையில்...

பக்கம் - 09



### வியாழேந்திரன் மீது வீசப்படும் துரோகி பட்டங்களும் அவரின் அரசியல் எதிர்காலமும்.

பக்கம் - 02



### தீபாவளி என்னும் விளக்கொளி விழா நாம் அறியாத கதை

தீபாவளிகொண்டாடிமுடிந்தகையோடுஉங்களுக்கெல்லாம்ஒருசெய்தி சொல்லவேண்டும்.

பக்கம் - 11



### மாரி வந்தால் படுவான்கரை வீதிகள் படும்பாடு

'மாரி பிறந்தால் வீதிக ளெல்லாம் ஆறாவதும்,

பக்கம் - 04



## மட்டக்களப்பில் வெள்ளத்தால் 6500க்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்தனர்

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ள நீர் தேக்கத்தை தவிர்க்க மட்டக்களப்பு முகத்துவாரம் வியாழக்கிழமை வெட்டி திறக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமாக இந்த கடுமையான மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால், 1996 குடும்பங்களைச் சேர்ந்த 6684 பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற நேர்ந்ததாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இயக்குனர் எம்.ஏ.சி.எம். ரியாஸ் தெரிவித்துள்ளார்.

இவற்றில் அதிகபட்சமாக வாகரைப் பகுதியில் 514 குடும்பங்களைச் சேர்ந்த 1759 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். வாகரையைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பெரும்பாலும் இடம்பெயர்ந்து தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

### நிவாரணப் பணிகள் தீவிரம்

கடுமையான மழையால் உன்னிச்சை, றூகம், வாகரை மற்றும் கட்டுமுறிவு ஆகிய குளங்கள் திறந்துவிடப்பட்டன. அதன் காரணமாக நீர்மட்டம் தாழ்வான பகுதிகளில் அதிகரித்தது. இதன் காரணமாக மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற நேர்ந்தது.

நிவாரணப் பணிகள் துரிதமாக நடந்ததாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவும், குடிநீரும், மருத்துவ உதவியும் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அனர்த்த முகாமைத்துவ இயக்குனர் கூறினார்.

நிவாரணப் பணிகளில் முப்படையினரும், அரச பணியாளர்களும் ஈடுபட்டதாகவும் அனர்த்த முகாமைத்துவ இயக்குனர் தெரிவித்தார். இந்த விவகாரங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

தொடர்ச்சி... (பக்கம் -09 )

## கொழும்பில் உச்சம் பெறும் அரசியல் நெருக்கடி

இலங்கையின் தலைநகர் கொழும்பில் அரசியல் நெருக்கடி மேலும் அதிகரித்து வருவதாக அரசியல் உயர் வட்டாரங்கள் கூறுகின்றன. அடுத்த ஆட்சியை யார் அமைப்பது என்ற குழப்பமும் அதிகரித்து வருகின்றது.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் இறுக்கமான தீர்மானங்களையடுத்து மஹிந்த தரப்பு தமது பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் நிரூபிப்பதில் பெரும் சிக்கல் நிலையை எதிர்நோக்கியுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பெரும்பான்மை நிரூபிக்கப்பட வேண்டும் எனவும் அதுவரையும் மஹிந்த ராஜபக்சவுக்கு பிரதமருக்குரிய ஆசனம் வழங்கப்படமாட்டாது என்றும் சபாநாயகர் உறுதியாகக் கூறிவிட்டார்.



அத்துடன் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னரான ஆசன ஒதுக்கீட்டின்படியே 14 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய, இறுக்கமான முறையில்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவித்துள்ளார். அரசியலமைப்பின் பிரகாரம் புதிய பிரதமர் மற்றும் அமைச்சர்களை ஜனாதிபதி ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னதாகவே நியமிக்கமுடியும். நாடாளுமன்ற சபை முதல்வரையும் நியமிக்கலாம். ஆனால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக புதிய சபாநாயகரை நியமிக்க முடியாது.

அந்த நம்பிக்கையில் சபாநாயகர் கரு ஜயசூரியவும் இறுக்கமான முடிவுகளை அறிவித்துள்ளதால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த புதிய அமைச்சரவை 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது 113 உறுப்பினர்களின் ஆதரவை நிரூபிக்காமல் பிரதமர், அமைச்சர்களுக்குரிய ஆசனங்களை கோர முடியாது என சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர். அதேவேளை, 2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 19 ஆம் ஆவது திருத்தச் சட்டத்தின்படி ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னராக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. அவ்வாறு

தொடர்ச்சி... (பக்கம் -11 )


TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

முதலாம் வகுப்பிற்கு பிள்ளையை சேர்ப்பதில்

அநீதி இழைக்கப்பட்டதா?

நேர்மையின் புகலிடம்
ஊழலை தடுப்பதற்கான சட்ட ஆலோசனை

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு – 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503



# வியாழேந்திரன் மீது வீசப்படும் துரோகி பட்டங்களும் அவரின் அரசியல் எதிர்காலமும்.



கடந்த இரு வாரங்களாக தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் பிரளயத்தின் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அவர்களின் கட்சித்தாவல் தமிழ் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரையும் விலைகொடுத்து வாங்கிவிட முடியாது என முன்னாள் இராணுவத்தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா கூறி 48மணி நேரம் கடப்பதற்கு முதல் கனடாவிலிருந்து வந்த கையோடு நேரடியாக ஜனாதிபதி மாளிகைக்கு சென்று பிரதியமைச்சர் பதவியை வியாழேந்திரன் பெற்றுக்கொண்டார்.

தமிழர் அரசியல் பரப்பில் இது அதிர்ச்சியான பரபரப்பான விடயம் தான்.

பொதுவாக முஸ்லீம் கட்சிகளிடையே ஆளும் கட்சிக்கு மாறி, அமைச்சுப் பதவிகளை பெறுவது என்பது வழமையானதுதான். 2010ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பியசேனா ஆளும் கட்சிக்கு மாறிய சம்பவத்தை தவிர்த்து பார்த்தால் சுமார் 40 வருடங்களுக்கு பின்னர் தமிழ் கட்சி ஒன்றிலிருந்து ஆளும் கட்சிக்கு மாறி, அமைச்சு பதவியை பெற்ற சம்பவம் தற்போது பதிவியாகியிருக்கிறது.

1979ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராசதுரை ஆளும் கட்சிக்கு மாறி இந்து கலாசார பிரதேச அபிவிருத்தி அமைச்சை பெற்றுக்கொண்டார்.

இராஜதுரையை துரோகி என தூற்றியவர்கள் மத்தியில் அவர் கட்சி மாறி அமைச்சு பதவியை பெற்றுக்கொண்டதை மட்டக்களப்பு மக்களின் ஒரு பகுதியினர் வரவேற்றிருந்தனர். ஆனால் இன்றுவரை இராஜதுரை அவர்களை துரோகி என சொல்லும் ஒரு தரப்பும் இருக்கத்தான் செய்கிறது.

கடந்த இரு வருடங்களுக்கு முதல் இராஜதுரை யாழ்ப்பாணத்திற்கு சென்ற போது ரெலோ கட்சியை சேர்ந்த சிவாஜிலிங்கம் துரோகி என தூற்றி ஆர்ப்பாட்டம் செய்திருந்தார். இச்செயல் சிவாஜிலிங்கத்திற்கு தான் இழுக்கே அன்றி இராஜதுரை அவர்களுக்கு பாதிப்பாகவோ அவமானமாகவோ இருந்திருக்காது.

அன்று இராஜதுரையை எவ்வாறு துரோகி என தூற்றினார்களோ அதேபோல இன்று வியாழேந்திரனை சிலர் துரோகி என தூற்றுகின்றனர். எங்கள் கழுதை ஒன்றை நீ திருடி விட்டாய் என ஜனாதிபதியை ஏசும் அளவிற்கு இந்த கட்சி தாவல் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு கோவத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் அன்று இராசதுரை கட்சி மாறி அமைச்சு பதவியை ஏற்றபோது மட்டக்களப்பில் இருந்த ஒரு சாரார் அதனை வரவேற்றது போல இன்று வியாழேந்திரன் கட்சி மாறி அமைச்சு பதவியை ஏற்றதை வரவேற்றிருக்கிறார்கள். மட்டக்களப்பில் இந்தக் கட்சிதாவலுக்கு பெரும்பாலான தமிழர்கள் மத்தியில் எதிர்ப்பு காணப்பட்ட போதிலும் கணிசமானவர்கள் இதனை வரவேற்றிருக்கிறார்கள்.

வியாழேந்திரன் கட்சி மாறி அமைச்சு பதவியை ஏற்றுக்கொண்டதை வரவேற்கும் மக்கள் மத்தியில் சொல்லப்படும் காரணங்களும் நியாயமானவை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசியல் பொருளாதார அபிவிருத்தியில் அவர்கள் நசுக்கப்படுகிறார்கள். அரசியல் அதிகாரங்களை வைத்துக்கொண்டு தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. அதனை தடுக்க முடியாத அநாதைகளாக தாம் இருப்பதாக தமிழர்கள் உணர்கின்றனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் மற்றும் அமைச்சர் என்ற அதிகாரத்தை வைத்து கோவில் காணியை சுவீகரித்தேன் என அமைச்சர் ஒருவர் கூறிய வீடியோவை பார்த்த ஒவ்வொரு தமிழனும் தமது இயலாமையை எண்ணி தாம் அரசியல் அநாதைகள் என்பதை எண்ணி வெம்பியிருப்பான்.

தான் செய்தவைகளில் ஒரு சம்பவத்தை அமைச்சர் சொல்லியிருந்தார். சொல்லாத சம்பவங்கள் ஆயிரம் இருக்கலாம். இந்த சம்பவங்களால் தினம் தினம் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதை தடுக்க வழியில்லையா என்ற ஏங்கியிருந்த மட்டக்களப்பு தமிழ் மக்களுக்கு வியாழேந்திரனின் பதவி ஏற்பு ஒரு துரும்பாக கிடைத்திருக்கிறது.

வியாழேந்திரனின் அமைச்சு பதவி தங்களின் ஏக்கங்களுக்கு ஒரு தீர்வாக அமைந்து விடும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடாகத்தான் மட்டக்களப்பு தமிழ் மக்களின் ஒருசாரார் இதை வரவேற்றிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மக்களின் இந்த ஏக்கத்தை உணரும் பக்குவமோ அறிவோ வெளியில் இருந்து துரோகி பட்டங்களை வீசிக்கொண்டிருப்பவர்களுக்கு கிடையாது.

முக்கியமாக புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் வழமையாக மட்டக்களப்பான் துரோகி என பட்டங்களை அள்ளி வீசுவதில் குறியாக உள்ளனர்.

வியாழேந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி ஆளும் கட்சியில் அமைச்சு பதவியைப் பெற்றது சரியா தவறா என்ற விடயம் தனியாக ஆராயப்பட வேண்டும்.

இந்த அமைச்சு பதவியை பெற்றதன் மூலம் மட்டக்களப்பு மக்கள் எதிர்பார்ப்பது போல மட்டக்களப்பில் தமிழர் தரப்புக்கு அரசியல் அதிகார பலம் வந்து விடும் என்று இப்போது சொல்லிவிட முடியாது. கிடைத்த அமைச்சுப் பதவியை தனது சுகபோகத்திற்கு அனுபவித்து விட்டு போகப்போகிறாரா அல்லது மட்டக்களப்பு தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பை தடுக்க அதனை பயன்படுத்துவாரா என்ற கேள்விக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும். இந்த அமைச்சுப் பதவி கூட நிரந்தரமானதா இன்னும் இரண்டு வருடங்களுக்கு இந்த பாராளுமன்றம் நிலைக்குமா என்பதும் தெரியாது.

சிலவேளை பாராளுமன்றம் கலைக்கப்படலாம். கலைக்கப்பட்டால் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகி அமைச்சு பதவியை வியாழேந்திரன் பெறுவாரா என்பதும் கேள்விக்குறிதான்.

வியாழேந்திரன் நீண்டகால கட்சித்தொண்டராக இருந்து தேர்தலில் குதித்தவர் அல்ல.

2015ஆம் ஆண்டு தேர்தல் அறிவிப்பு வெளியான போது தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம்கேட்டு சென்ற வியாழேந்திரனுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் புளொட் இயக்கத்தின் சார்பில் வேட்பாளர்

இரா.துரைரத்தினம்

பட்டியலில் இடம்பிடிக்கலாம் என்பதை அறிந்து கொண்ட வியாழேந்திரன் புளொட் தலைவர் சித்தார்த்தனை நாடி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்து கொண்டார்.

தேர்தல் முடியும் வரை தான் புளொட் சார்பில் வேட்பாளர் பட்டியலில் இடம்பிடித்த கதையை தேர்தல் பிரசாரத்தின் போது சொன்னது கிடையாது. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இருந்த ஆதரவு அலையை பயன்படுத்தி தனது மாணவர் படையை வைத்து தனக்கான விருப்பு வாக்கை பெற்று வெற்றி பெற்றார்.

வெற்றி பெற்றதன் பின்னர் தன்னை வேட்பாளர் பட்டியலில் இணைத்த சித்தார்த்தனுக்கு வியாழேந்திரன் நன்றி தெரிவித்த போதுதான் வியாழேந்திரன் புளொட் இயக்கத்தின் சார்பில் தான் மட்டக்களப்பில் போட்டியிட்டார் என்ற விடயம் பலருக்கும் தெரியவந்தது.

எது எப்படியோ வியாழேந்திரன் மிகச்சாதுரியமாக தான் வெற்றி பெறுவதற்கு புளொட் இயக்கத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் பயன்படுத்திக்கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனோ அல்லது தமிழரசுக்கட்சியுடனோ உறவை வளர்த்துக்கொள்ளவில்லை. கொஞ்சம் விலகி நின்று தனது அரசியலை செய்து வந்தார். கடந்த ஒரு வருடமாக தமிழரசுக்கட்சியையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் கடுமையாக விமர்சித்து வந்தார்.

இந்நிலையில் தான் வியாழேந்திரன் கட்சி தாவி விட்டார் என்ற பிரளயம் நடந்திருக்கிறது.

இப்போது வியாழேந்திரனின் அரசியல் எதிர்காலம் பற்றிய கேள்வியும் எழுகிறது. இனி அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தான் போட்டியிட முடியும். இல்லையேல் சுயேச்சை குழுவை அமைத்து போட்டியிட முடியும்.

இந்த இரண்டு தெரிவும் வியாழேந்திரனுக்கு வாய்ப்பாக இருக்கும் என சொல்ல முடியாது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் மட்டக்களப்பு

# தந்தை எவ்வழியோ தனயர்களும் அவ்வழியே!






இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் கள நிலவரத்தில் கிழக்குத் தமிழ் மக்களின் பார்வைகள் பல கோணங்களாக விழுகின்றன. காரணம் மட்/மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதி எஸ்.வியாழேந்திரன் அவர்களின் மகிந்தவுக்கான தன்னிச்சையாக மேற்கொண்ட ஆதரவுக்கான அதிரடி முடிவு பற்றி அலசப்படுகின்றன.

இவ்விமர்சனங்களுக்கு மத்தியில் எனது பார்வையை இப்பிரச்சினையின் பக்கம் திருப்புகிறேன்.

ஏற்கனவே தமிழரசுக்கட்சிக்கும்;;;;, வியாழேந்திரனுக்கும் பல விடயங்களில் முறுகல் நிலையிருந்து வந்தது. இதில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் 'தமிழ் கட்சிகள் ஓரே பட்டியலில் போட்டியிட வேண்டும்.' என வியாழேந்திரன் அழுத்திக் கூறி வந்தார். (அரங்கம் 19)

இவரின் பேச்சுக்கு கூட்டமைப்பு பாதகமான பதிலைத் தந்தது மட்டுமல்லாது, கட்சியின் கூற்றுக்கு தலை சாய்க்காதவர்கள் கூட்டமைப்பில் நின்று வெற்றி பெற்ற உறுப்பினர் பதவியை துறந்து விட்டு பேசலாம் என சட்டாம்பிப்பிள்ளைத் தனமாக உறுக்கி வைக்கப்பட்டார். இதன் நிமித்தம் வியாழேந்திரன் எம். பிக்கும் தமிழ்தேசியக்கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் வெளிப்படையாகவே இடம்பெற்று வந்தன.

பின்பு இதே வியாழேந்திரன் வட மாகாணத்துக்கான முதலமைச்சரை தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டும் கூட்டமைப்பு, கிழக்குமாகாணத்துக்கான முதலமைச்சரை இனங்காண்பதில் ஏன்? கரிசனை காட்டுவதாகயில்லையென கேள்வி எழுப்பியிருந்தார். இதுவும் தமிழரசுக்கட்சிக்கு பிடிக்கவில்லை.

வியாழேந்திரனின் கடந்தகால செயல்பாடுகளும் போராட்டங்களும் கிழக்கு தமிழ் மக்களை மையப்படுத்தியே இருந்தன. இதுவும் தமிழரசுக் கட்சிக்கு கசப்பாகவே இருந்தது.

தமிழரசுக்கட்சியின் அசைவுகள் ஒட்டுமொத்த தமிழர்களுக்காக இருக்க வேண்டுமே தவிர கிழக்குத் தமிழர்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கக் கூடாது என்பதே தமிழரசுக்கட்சியின் எண்ணத்தின் வெளிப்பாடாகும்.

வியாழேந்திரனுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையை சரி செய்ய புளொட் கட்சியின் தலைவர் சித்தார்த்தன் பின்வருமாறு அறிக்கையிட்டிருந்தார்.

"கிழக்கில் மாத்திரமில்லை வடக்கிலும் உள்ளூராட்சி சபைகளை ஆட்சி அமைக்க பேரினவாதக் கட்சிகளின் ஆதரவை தமிழ்தேசியக் கூட்டமைப்பு பெறமுடியுமானால் ஏனைய தமிழ்கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து ஒரேயணியாக தேர்தலில் போட்டியிடுவதும் நியாயமானதே" என வலியுறுத்தி இருந்தார்.

இப்படியான அரசல் புரசலின் உச்சக்கட்டமே வியாழேந்திரனின் மகிந்த சார்புத் தன்மையின் காரணமாகவும் இருக்கலாம்.

தம்மிடமிருந்து ஒருவர் மாற்றுக்கட்சியின் தலைவருக்கு ஆதரவு வழங்குவது தவறென்றால் பேரினவாதக் கட்சிகளின் ஆதரவை பெற்று தாங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை அமைக்கலாமா? என மக்கள் கேட்காமலில்லை.

அதேவேளை 1965ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஆட்சி அமைக்க பெரும்பான்மை இல்லாமல் இருகட்சிகளும் அங்கலாய்த்து இருந்தவேளை,

தமிழர்களுக்கு சமஸ்டி ஆட்சியே தேவையென பிரகடனப்படுத்தி, தமிழரசுக்கட்சியை தொடங்கிய தந்தை செல்வா, வீட்டுச்சின்னத்தில் வாக்குகளைப் பெற்ற அங்கத்தவர்களுடன், சமஸ்டியை ஒரு பக்கமாக வைத்து விட்டு, யானைக்கு (யூ. என்.பி) ஆதரவளித்து முதிருச்செல்வத்தை உள்ளூராட்சி அமைச்சராக்கினார். என்பது வரலாறு.

இதேவேளை தமிழருக்கான தீர்வுத் திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கொண்டு வந்தபோது அத்திட்டத்தை பாராளுமன்றத்தில் தீயிட்டுக் கொளுத்தியவர் ரணில் விக்கிரமசிங்காவாகும்.

இது இவ்வாறு இருக்க ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஸ்தாபனரீதியாக ரணிலுக்கு வாக்களித்து அவரைக் காப்பாற்றியும் இருந்தது.

மேற்படி வாக்கெடுப்புக்கு முன்பு அனந்தி சசிதரன் அவர்கள் கூட்டமைப்பு நடுநிலை வகிக்க வேண்டுமென ஆணித்தரமாக

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கிழக்கிலங்கையின் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள் 2



இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள தொல்பொருள் சான்றுகளும் இயக்கர் இலங்கையின் பூர்வ குடிகள் - குறுணிக்கற்கால மக்கள் எனக் காட்ட, நாகர்கள் ஆதி இரும்பக்கால – பெருங்கற்காப் பண்பாட்டு மக்கள் என்றும் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து தமது பண்பாட்டின் செல்வாக்கை நிலைநிறுத்தியவர்கள் என்றும் இயக்கரும் நாகரும் ஒன்று கலந்தனர் என்றும் எடுத்துக் காட்டுகின்றன. குறுணிக்கற்கால மக்கள் ஒரு வகை முண்டா மொழியினைப் பேசியவர்கள் என்று அறிஞர் கொள்வர் எனவும் குறிப்பிடுகிறார் சி.பத்மநாதன் (பக்: 26) அவர்கள். நாகர்கள் மிகப் பண்டைக்காலத்தில் இலங்கையில் குடியேறியோராவார். அவ்வகையில் அவர்களை இலங்கையின் பழங்குடியினர் எனக் கொள்ளலாம்.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், இயக்கர் மற்றும் நாகரை மட்டக்களப்பின் பூர்வ குடியினர் எனக்குறிப்பிடுகின்றது. அண்மைக்காலத்தில் அறியப்பட்ட தொல்பொருள் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு, மட்டக்களப்பு பிரதேசத்தில் நாகருக்கு முன்பு பல நூற்றாண்டுகளாக இயக்கர் வாழ்ந்து வந்துள்ளனர். இயக்கரின் நடமாட்டம் மலைகளிலும் மலையடிவாரங்களிலும் கூடுதலாகக் காணப்பட்டது எனக் குறிப்பிட்டிருக்கிறார் சி.பத்மநாதன் அவர்கள். (பக் 435) மேலும், இலக்கியம் வளம் பெறாத, ஆதிகுடிகளான இயக்கரின் மொழி காலப்போக்கில் அழிந்து விட்டது. தென்னிலங்கையில் இயக்கரின் மொழியும் தமிழும் வழக்கற்றுப் போய்விட்டன. ஆயினும் இலங்கையில் மூன்றிலோரு பாகத்தில் வடமேற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் மொழியின் ஆதிக்கம் காலப்போக்கில் மேலோங்கி விட்டது. இங்கு இயக்கரின் மொழியும் பிராகிருதமும் வழக்கொழிந்து விட்டன என்ற தகவலையும் தருகிறார் சி.பத்மநாதன் (பக் : 454) அவர்கள்.

இலங்கையிலுள்ள பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் தமடே, பத, பரத, நாக, கபோஜ, பமன என்னும் இன, சமூக குழுக்கள் பற்றிய விபரங்கள் கிடைக்கின்றன. (சி.பத்மநாதன், பக்:18) இவர்களில் பத என்போர் சமூக உற்பத்தியிலும் மொழி வழக்கிலும் ஏனையோரிலிருந்தும் வேறானவர்கள் என்பதற்கு பதவி நிலைகளில் இருந்த வேறுபாடு அடையாளமாகிறது. பத என்பது பூர்வீக குடிகளான குறுணிக்கற்கால மக்களைக் குறிக்கும் பெயராகலாம் எனக்குறிப்பிடுகிறார் சி.பத்மநாதன் (பக்: 26) அவர்கள்.

**கிரான் விஜய்**

மட்டக்களப்பில் "குசலான் மலையில் பிராகிருத மொழியிலுள்ள நான்கு கல்வெட்டுக்கள் பத என்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வழங்கிய நன்கொடைகளைக் குறிப்பிடுகின்றன. அவர்கள் பௌத்த சங்கத்தினருக்குக் குகைகளை வழங்கினார்கள். அவர்கள் அனைவரும் பிராகிருத மொழிப் பெயர்களைப் பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவன் பத புஸபூதி, இன்னொருவன் பத கௌதம, என்பவன்; மற்றொருவன் க பதி சுமண; அவன் பத வே வகுத்தனின் சகோதரன்; வேறொருவன் பத சுதன என்பவன். குசாலன்மலைக் கல்வெட்டுக்கள் மூலம் பத என்போர் நாகரைப் போன்று ஒரு வேறான சமூகப் பிரிவினர் என்பதை உணரமுடிகிறது." எனக்குறிப்பிடுகிறார் சி.பத்மநாதன் அவர்கள். (பக்:116-117) இவர்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழ்ந்த பூர்வ குடியினாரவர். "மட்டக்களப்பு தேசத்தின் தென்பகுதிகளிலுள்ள கல்வெட்டுக்களிற் பத என்ற சொல் மிகக் கூடுதாலகக் காணப்படுகிறது.", "நாகரை உள்ளடக்கிய ஆதி இரும்பக்காலப் பண்பாட்டு மக்களும், பத என்போரை உள்ளடக்கிய பூர்வ குடிகளும் சங்கமமாகின்ற நிலை ஏற்பட்டது. இரு சாராரும் பெரும்பாலும் பிராகிருத மொழிப் பெயர்களைப் பெற்றனர். பௌத்த சமயத்திலும் சேர்ந்து விட்டனர். எனினும், காலப்போக்கில் பிராகிருதமன்றித் தமிழே அவர்களின் பொது மொழியாகியது." எனவும் குறிப்பிடுகிறார் சி.பத்மநாதன் அவர்கள். (பக்:117) நாகர் மட்டக்களப்பு பிரதேசத்தில் பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்களாவர். மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் நாகர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

**அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)**
**அறிவாலயம் பவுண்டேசன்**
**மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.**

## மாரி வந்தால் படுவான்கரை வீதிகள் படும்பாடு



'மாரி பிறந்தால் வீதிகளெல்லாம் ஆறாவதும், போக்குவரத்து தடையாகுவதும் வருடாந்தச் செய்திகளாகின்றன. படுவான்கரைப் பகுதியில் உள்ள வீதிகள் பெரும்பாலானவை, கிறவல்களை கொண்டு அமைக்கப்பட்டவையே. இதனால் வீதிகள் பள்ளங்களாவதும், பயணிகள் வீழ்ந்து எழுந்து செல்வதுமே பழகிப்போனதொன்று' என மாசிலாமணியும், நல்லதம்பியும் மாவடிமுன்மாரி பாலத்தடியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

கொக்கட்டிச்சோலையிலிருந்து தமக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு, தமது ஊரான, நாற்பதுவட்டை கிராமத்திற்கு செல்வதற்காக, வந்த நல்லதம்பியும், மாசிலாமணியும் மாவடிமுன்மாரி வயலூர் முருகனை கடந்து, பாலத்தினை அடைந்ததும் வீதியைக்காணாது, ஆற்றையே கண்டு அஞ்சி நின்றனர். பாலத்தில் நின்ற இருவரும், கடந்த காலத்தினையும் மீட்டிப்பார்த்து பேசிக்கொண்டனர்.

அருகில் உள்ள வயலினைவிட, வீதி பள்ளமாகிவிட்டது, அருகில் இருந்த வாய்க்காலும் வீதியும் சமனானதால், காடுகளிலிருந்தும், குளங்களிலிருந்தும் ஓடிவருகின்ற நீர் வீதியின் ஊடாக கடந்து செல்கின்றது. இந்நிலை தற்போது உருவானதல்ல. கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவருகின்றதொன்று. இவ்வீதியின் ஊடான போக்குவரத்து துண்டிக்கப்படுவதும் வழமையானதொன்றே. இதனால் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லமுடியாத மற்றும் தாந்தாமலை, நாற்பதுவட்டை, மக்களடியூற்று ஆகிய பகுதிகளுக்கு மக்கள் செல்வதும் கடினமானதொன்றாகவே மாறிவிடுகின்றது. நான்கு, மூன்று அடிக்குமேல் நீர், இவ்வீதியினால் பாய்வதினால் வாகனங்களைச் செலுத்தமுடியாது. அதேவேளை, வீதியில் பள்ளங்கள் இருப்பதினால் ஆபத்துநிறைந்த போக்குவரத்துமாகவே மாறிவிடுகின்றது. இவ்வீதியில் பயணித்த ஒருவர் நீரினால் அடித்துச்செல்லப்பட்டு மரணித்த சம்பவமும் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன. சிறுமழைக்குக்கூட தண்ணீர் தேங்கி நிற்கும் பெருமைமிகு வீதியாக இது உள்ளதாக நல்லதம்பி கூறுகின்றார். இதைவிடவும் இன்னமும் பெருமை சேர்க்கின்ற வீதியாகவும் இவ்வீதியுள்ளதாக குறிப்பிட்டார்.

மழைகாலத்தில் ஆறாகவும், கோடைகாலத்தில் கிறவல் புழுதிக்கும் பெயர்போன வீதியாகவும் இவ்வீதியுள்ளதாகவும் பலருக்கு இவ்வீதியின் பெருமை தெரியுமெனவும், குறிப்பிட்ட மாசிலாமணி, இவ்வீதியின் நிலைதொடர்பில் அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடமும் குறிப்பிட்டும், ஒருதிட்டத்தில் உள்வாங்கி உள்ளதாக குறிப்பிடுகின்றார்கள், அடுத்த மாதம், அடுத்த வருடம் என கூறிகூறி பலவருடங்களை கடத்திவிட்டனர். ஆனால் எதுவுமே நடந்ததாக தெரியவில்லையென நல்லதம்பி புறுபுறுத்துக் கொண்டார். படுவான்கரைப் பிரதேசத்தில் மழை பெய்ய ஆரம்பித்தால், பல வீதிகளினூடாக நீரோட ஆரம்பிக்கும், வீதிகள் துண்டு, துண்டாக உடைப்பெடுக்கும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களை சுமக்க வேண்டிய நிலையேற்படும். இதனை அனுபவிப்பவர்களுக்குதான், அதனது வலி புரியும். மாரி மழை பெய்து நிறைவடைய, புதிய வருடம் பிறக்கும், புதிய வருடத்தில் நெல் அறுவடைகளும் ஆரம்பிக்கும். மாரிமழையால், வீதிகள் உடைந்து காணப்படும். அறுவடை செய்வதற்கு, வாகனங்களை கொண்டு செல்வதற்கு, அறுவடை செய்த நெல்லை வீடுகொண்டு சேர்ப்பதற்கு பல பிரயத்தனங்களையும், செலவீனங்களையும் செய்ய வேண்டியேற்படும். இதனால் வீதிகளைப் பார்த்து சலிப்படையும் சமுகமாக படுவான்கரை சமுகத்தினர் மாறியுள்ளனர். இவ்வற்றிற்கு நிரந்தர தீர்வினை வழங்க திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். அவ்வாறு திட்டங்கள் தீட்டப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றதா? என நல்லதம்பியைப் பார்த்து மாசிலாமணி வினவினார். இதற்கு பதிலளிக்க ஆரம்பித்த மாசிலாமணி, படுவான்கரைப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்திகள் சிறப்பாக நடைபெறவில்லை. அரசினால், வீதி அபிவிருத்தி பெரியளவில் மேற்கொள்ளப்படவுமில்லை. அரசசார்பற்ற நிறுவனங்கள் இல்லையென்றால், கிராமங்களில் உள்ள பல வீதிகள் ஒழுங்கைகளாகவும், மணல்வீதிகளுமாகவே காணப்பட்டிருக்கும். நிறுவனங்களின் உதவியினாலேயே, பல வீதிகளுக்கு கிறவல் இடப்பட்டு, ஓரளவு போக்குவரத்து செய்யக்கூடிய நிலையில் அவை உள்ளன.

அரசினால் செய்யப்பட்ட ஒருசில வீதிகளும் தொடர்ச்சியாக உடைவதும், அவ்விடத்தினை ஒட்டுவதுமே நடந்தேறுகின்றது. தார்வீதிகளாக மூன்று தசாப்தத்திற்கு முன்பு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் சில தார் இன்றி கிறவல் வீதியாகவே காட்சியளிக்கின்றன. பெயருக்குதான் வீதியென்று சொல்லுமளவிற்கு பல வீதிகள் இருக்கின்றன. மழைபெய்து நீரும் வடிந்துவிட்டால், வீதிகளிலெல்லாம் மண்நிரம்பிக் காணப்படும், இதனால் இவ்வீதிகளில் வாகனங்களை செலுத்த முடியாது. ஆகமொத்தத்தில், வீதியென்ற பெயருடன் பல வீதிகளும், மாரி கால ஆறுகளாக வீதிகளும், குளங்களாக வீதிகளும், மணல்பரப்புக்களான வீதிகளுமே நிரம்பியுள்ளன. எனக்கூறிவிட்டு பொருட்களை தலையிலே சுமந்து கொண்டு வாகனத்தினையும் மெதுமெதுவாக தள்ளிக்கொண்டு மாவடிமுன்மாரி வீதியினை நல்லதம்பியும், மாசிலாமணியும் கடந்தனர்.

தற்கால உலகில் போக்குவரத்தென்பது மிக முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. ஆனாலும், போக்குவரத்து செய்வதற்கான பேரூந்து வசதிகள் இன்றி அன்றாடம் பலமணி நேரங்களை கால்நடையில் செலவிடுகின்றவர்களாக படுவான்கரை மக்கள் உள்ளனர். இதற்கு வீதிகளின் ஒழுக்கின்மையும் மிகவும் முக்கிய காரணமே. இவற்றினை தீர்ப்பதன் மூலம் பல மணிநேரங்களை சேமிக்க முடிவதுடன், காரியங்களும் இலகுவாக்கப்படும். இதற்காக, இம்மக்களின் துயர்துடைக்க முன்வரவேண்டும்.

**படுவான் பாலகன்**

---

## கடும் மழையால் காரைதீவில் 750 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன

**கிழக்கு அனர்த்த முகாமைத்துவக்குழுவிடம் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் ஜெயசிறில் தெரிவிப்பு.**

(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஒருவார காலமாக பருவ மழை கடுமையாக தொடர்ந்து பெய்து வருகின்ற காரணத்தினால் காரைதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த 750 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக புதிதாக கிழக்கு ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு அனர்த்த முகாமைத்துவக்குழுவிற்கு காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் தெரிவித்துள்ளார்.



இராணுவமுகாமையும் நந்தவன சுனாமி மீள்குடியேற்ற வீட்டுத்தொகுதியையும் சுற்றி வெள்ள அபாயம் எந்நேரமும் ஏற்படலாமென அவர் தெரிவித்தார். தாழ்நிலப்பகுதிகளில் வீடுவாசல்களிலும் வெள்ளம் தேங்கியுள்ளதால் சுகாதாரத்திற்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் சொன்னார். வீதிகள் வெள்ளத்தால் தாழ்ந்துள்ளன. மக்களின் அன்றாட வாழ்வியல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அன்றாடங்காய்ச்சிகள் சிரமப்படுகின்றார்கள்.

காரைதீவுக்கிராமம் தாழும் நிலை ஏற்றபட்டபோது இராணுவத்தின் உதவியால் முகத்துவாரம் வெட்டப்பட்டு வெள்ளம் கடலுக்குள் விடப்பட்டது.

விவசாய நிலங்களைக் கொண்ட காரைதீவில் கடுமையான வெள்ளம் காரணமாக மக்கள் இடம் பெயர வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குவதற்கும் அழிவுற்ற வீடு மற்றும் விபரங்கள் தொடர்பில் அழிவு பதிவுகளை மேற்கொள்ள அனர்த்த முகாமைத்துவப்பிரிவு ஏற்பாடுகளை செய்யவேண்டும் என கிழக்கு அனர்த்த குழுவுக்கு தவிசாளர் ஜெயசிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.. இதுவரை இப் பிரதேசத்தில் வெள்ள அனர்தம் காரணமாக இடைத்தங்கல் முகாங்கள் அமைக்கப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி - சில அவதானங்கள்

பேராசிரியர் செ. யோகராசா

மேற்குறித்த திண்ணைப்பள்ளிக்கல்வி முறையிலே கற்பிக்கப்பட்ட பாடங்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் போது ஆரம்ப அடிப்படைக் கல்வி நெறி சார்ந்ததாகவே அவை காணப்படுகின்றமை புலப்படுகின்றது. அவ்வாறெனில் ஒரு கேள்வி எழுகிறது, முன்னைய காலங்களிலே புலவர்களாக திகழ்ந்தோர் இத்தகைய கல்வி முறையினால் உருவானவர்களா என்பதே அக்கேள்வி ஆகும். அக் கேள்வியை இத்தகைய கல்வி வழி வந்தோரால் செந்நெறி இலக்கியங்கள் உருவாக்கப்பட்டிருக்க முடியுமா? என்று இன்னொரு விதமாகவும் கேட்கலாம்.

முற்கூறியவறான அடிப்படை கல்வியை பெற்றுக் கொண்டோருள் வசதி படைத்த சிலர் தமது கிராமத்திலோ அல்லது அயற்கிராமங்களிலோ வசித்த, உயர் கல்வி கற்ற பெரியோர்களை அல்லது புலவர்களை நாடி தொடர்ந்து தமது உயர் கல்வியைப் பெற்றுக் கொள்கின்ற பாரம்பரியமும் நிலவி வந்துள்ளது. இத்தகைய கல்வி முறையும், திண்ணைப்பள்ளி கல்விமுறை சார்ந்ததென்று கூறுவதில் தவறில்லை. எனினும் யாழ்ப்பாண பிரதேசத்திலே இத்தகைய கல்வி முறை நிலவி வந்தமை பற்றிய அதிக தகவல்களைப் பெறக் கூடியதாயிருக்க, மட்டக்களப்பு பிரதேசத்திலே பிற்பட்டகால (19ம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 20 ம் நூற் றாண்டின் ஆரம்பம்) தகவல்களே கிடைக்கின்றன. ஆதலின் முன்னைய மட்டக்களப்புப் பிரதேச பாரம்பரியக் கல்வி முறை அக்காலங்களிலே இத்தகைய கல்விமுறை முக்கியத்துவம் பெற்றிருக்கலாம் என்று ஊகிக்கத் தோன்றுகின்றது. யாழ்ப்பாணத்திலே செம்மொழி இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் மட்டக்களப்பு மக்கள் தங்களுக்குரித்தான மரபு வழி இலக்கியங்களைத் தோற்றுவித்தனர் என்ற அண்மைக் கால மட்டக்களப்பு ஆய்வாளர் ஒருவரது சுற்றும் இங்கு நினைவிற்கு வருகிறது.



தவிர, முன்னைய காலங்களில் இலங்கையில் பிராமணர்கள் செறிந்து வாழ்ந்து வந்த இடங்களிலே கல்விவாய்ப்புக்கள் அதிகரித்து காணப்பட்டன. மட்டக்களப்பு பிரதேசத்தை பொறுத்த வரையிலே பிராமணர்கள் செல்வாக்கு பெற்றிருப்பதாக அறிய முடியவில்லை. ஆகம மரபு சார்ந்த கோயில்கள் இங்கு அதிகம் காணப்படாமை இதற்கு காரணமாயிருக்கலாம்.

ஆயினும் உயர் கல்வி முறை முற்று முழுதாக இங்கு காணப்படவில்லை என்று கூறமுடியாதுள்ளது. ஒல்லாந்தர் காலத்திலே தோன்றிய போடி கல்வெட்டின் ஒரு பகுதி சிந்தனைக்குரியதாயுள்ளது அது பின் வருமாறு:

" இயலிசை நாடகம் எங்கும் வழங்க
செயலொடு திரிச்சிரா தேசத்தவரில்
அம்பிலாந்துறை அதிலே சென்று
வம்பிலார் கலிங்க மரபினொருவன்
பலநூா லாய்ந்து பண்டிதர் சிலரைக்
கவி பல விளங்க காசினியோர்க்கு
மெய்ஞான மூட்டி வினையகன்றிருக்க
அஞ்ஞான மகல அறிவுரை பெருக
செம்பனோடைவரும் சேர்ந்திந் நகரில்
கம்பப் புலவர் காட்டிய நான்முறை
அன்னசத்திரம் அளித்திடு நகரில்
பன்னூ லோதும் பண்டிதர் வரவே சம்பநா
தன்தன்னை இரு மென்று அம்பிலாந்
துறையதனில் வைத்து வேண்டிய தமிழ்
நூால் விளங்கப்பயிற்றென ஆண்டன
நெங்கும் அழகுக மரபினோர் "

ஒல்லாந்தர் கி.பி 1766 ஆம் ஆண்டு அறுமக்குட்டியை மட்டக்களப்பு வடபகுதிக்குப் போடியாக நியமித்து "ஆக்கொத்து" எமுதின் கொடுத்தனர். என்று அறியப்படுகிறது. அறுமகுட்டி போடியின் ஆட்சியின்போது அவர் செய்த கல்வி பணிகள் மேற்கூறிய பகுதியில் விவரிக்கப்பட்டிருப்பதாகக் கருதலாம். இதிலிருந்து இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன் அம்பிலாந்துறையில் ஒரு கல்விக்கழகம் இருந்திருக்கவேண்டும் எனவும் செம்பன் முதலிய ஆசிரியர் ஐவருடன் அங்கு தலைவராக சம்புநாதன் நியமிக்கப்பட்டதாகவும் அந்த ஆசிரியர்கள் திருச்சிராப்பள்ளியிலிருந்து அழைத்து வரப்பட்டதாகவும்

# இரா.துரைரத்தினத்தின் கவனத்திற்கு...

## கிழக்கு தமிழ் மக்கள் விக்னேஸ்வரனை செங்கம்பளம் விரித்து வரவேற்பார்களா?

அரங்கம், வெள்ளி நவம்பர் 02, 2018, இதழ்-37 இல் வெளிவந்த 'கிழக்கு தமிழ் மக்கள் விக்னேஸ்வரனை செங்கம்பளம் விரித்து வரவேற்பார்களா?'என்ற தலைப்பில் இரா துரைரத்தினம் எழுதிய கட்டுரையில் உள்ள சில விடயங்கள் சமந்தமாக சில விளக்கங்களை முன்வைக்கின்றேன். அவர் தனது கட்டுரையில் 'தமிழ் தேசிய கூட்டமைப்புக்கான வித்து கிழக்கில் தான் விதைக்கப்பட்டது. எந்த அரசியல் கட்சிகளையும் சாராத நடுநிலையாளர்களாக செயற்பட்ட கிழக்கு பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் என சிலரின் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் விளைவாக 2001 ஆம் ஆண்டு அக்டோபர் 20ம் திகதி கொழும்பில் பிரபல வர்த்தகர் வடிவேற்கரசன் வீட்டில் நான்கு கட்சிகள் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ் வரிகள் ஏதோ ஒன்றை மனதில் ஒழித்து வைத்துக்கொண்டு அதற்கேற்ற வகையில் வார்த்தைகளை கோர்த்து இருப்பதாகவே தெரிகிறது. தமிழ் தேசியகூட்டமைப்பின் உருவாக்கத்தில் ஊடகவியலாளரான மட்டக்களப்பை சேர்ந்த சிவராமும் (தராக்கி) சமந்தபட்டிருந்ததை மனதில் கொண்டு 'நடு நிலையாளர்களாக செயற்பட்ட கிழக்கு பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள்' என மிகைப்படக் கூறியுள்ளார். நான்கு கட்சிகளும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கொழும்பு வீட்டுச் சொந்தக்காரர் வடிவேற்கரசன் அவர்கள் தமிழரசுக்கட்சி காலத்தில் இருந்தே அமிர்தலிங்கம் அவர்களுக்கு மிக நெருக்கமானவர் என்பதும் தமிழரசுக்கட்சிக்கு அவ்வப்போது நிதி உதவி வழங்கியவர் என்பதும் கொழும்பில் யூ.என்.பி ஆதரவாளர் என்பதும் யூ.என்.பி கட்சியின் சார்பில் செனட்டராக இருந்த நீதிராஜா அவர்களின் மருமகன் என்பதும் பலரும் அறிந்த விடயம். இதில் சமந்தப்பட்ட இன்னொருவரான க.நீலகண்டன் அவர்களும் அமிர்தலிங்கத்துடன் மிக நெருக்கமான தமிழரசுக்கட்சிக்காரர். இவர்கள் இருவரும் கொழும்பில் வசித்தாலும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள்.; 'நடுநிலையாளர்கள்'என்று அவர் பயன்படுத்திய வார்த்தைப் பிரயோகத்தில் 'நடுநிலை' என்பது எதனை குறிக்கின்றது. புலிகளின் ஆதரவாயிருந்தவர்களும் தமிழரசுக்கட்சிக்காரர்களும் தான் அவரின் பார்வையில் நடுநிலையானவர்களா?

தமிழ்தேசிய கூட்டமைப்பு உருவான போது அதில் தமிழர் விடுதலை கூட்டணியும், அகில இலங்கை தமிழ் காங்கிரசும், ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ ஆகிய நான்கு கட்சியினர்களும் தானே இணைந்தனர். தமிழர் விடுதலை கூட்டணியின் வீ. ஆனந்தசங்கரி அவர்கள் தானே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்ப காலத்தலைவர். 2001 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இந்த நான்கு கட்சிகளும் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தின் கீழே தானே போட்டியிட்டன. இதில் 'புளட்' சேர்த்துக் கொள்ளப்பட வில்லையே?

பின்னர் 2004ஆம் ஆண்டுத் தேர்தலின் போது ஆனந்த சங்கரியையும் தமிழர் விடுதலைக்கூட்டணியையும் ஓரங்கட்டிவிட்டு, அந்த இடத்தில் தமிழரசக்கட்சி புகுந்து கொண்டு தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து தமிழரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்தின் கீழ் தானே போட்டியிட்டன? இப்போதும் 'புளட்' சேர்த்துக் கொள்ளப்படவில்லையே. பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து 2010 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கழற்றிவிடப்பட்டதே? வட மாகாணசபைத்தேர்தலின் போது தானே 'புளட்' முதன்முதலாக சேர்த்துக்கொள்ளப்பட்டது. 2015ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் உம் ஓரங்கட்டப்பட்டு இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது தமிழரசுக்கட்சி, ரெலோ, புளட், ஆகிய மூன்று கட்சிகளினதும் கூட்டாகத்தானே குறுகிப்போனது. இப்போது ரெலோவும் புளட்டும் ஒடும் புளியம்பழமும் போன்ற உறவைத்தானே தமிழரசக்கட்சியுடன் (தமிழ் தேசியக் கூட்டமைப்புடன்) கொண்டிருக்கின்றன. இந்த குத்து வெட்டுக்களும் வெட்டி ஒட்டும் வேடிக்கைகளும் நிகழ்ந்து கொண்டிருந்த போது அதனைச் சீர்செய்ய முன்வராமல், இரா. துரைரத்தினத்தினால் குறிப்பிடப்பட்ட ஏற்பாட்டாளர்களான எந்த அரசியல் கட்சிகளையும் சாராத நடுநிலையாளர்களாகச் செயற்பட்ட கிழக்கு பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் எங்கே ஓடிஒழிந்தார்கள்?

ஏதோ கிழக்கின் நன்மைக்காகத்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவானது என்ற போலியான தோற்றப்பாட்டை எழுப்ப முயல்கிறார். எனவே இரா. துரைரத்தினம் போன்ற மூத்த ஊடக வியலாளர்கள் வாசகர்களுக்கு பிழையான புரிதல்கள் ஏற்படக்கூடியவாறு எழுதக்கூடாது. வாசகர்களுக்கு பொருள் மயக்கம் ஏற்படாதவாறு எழுதப்பழக வேண்டும்.

மேலும் அவரது கட்டுரையின் இன்னொரு இடத்தில் 'அண்மையில் கூட தமிழ்க்கட்சிகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்பட

தொடர்ச்சி... (பக்கம் -15 )

செங்கதிரோன்.
த.கோபாலகிருஸ்ணன்
(கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபகருள் ஒருவர்)

# விளையாட்டு

## மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் ஒளிர்ந்து மறைந்த மகேசன்

1980 களில் தேசிய மட்டத்தில் மட்டக்களப்பின் கால் பந்தாட்டத்திற்கு முகவரி பெற்றுக் கொடுத்த மட்டக்களப்பு கால்பந்தாட்ட வீரர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவராக “குண்டு மகேசன்” என கால்பந்தாட்ட நண்பர்களாலும், கால்பந்தாட்ட ரசிகர்களாலும் செல்லமாக அழைக்கப்பட்டவர் மறைந்த திரு.மகேசன்.

மகேசன் அவர்கள் ஆரம்பத்தில் மைக்கல்மென் கழகத்திலும் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்திலும் பின்னர் சுதந்திரன் விளையாட்டுக் கழகத்திலும் பங்குபற்றி, மட்டு நகரின் கால்பந்தாட்டத்திற்குத் தனது பங்களிப்பை வழங்கியவர்.

1990 களில் அணிக்கு பதினொருவர் விளையாடும் போட்டிகள் மிகக் குறைவாக நடந்த சூழலில் மட்டு நகரில் செவண சைட் போட்டிகளே ஆதிக்கஞ் செலுத்தி வந்தன. அக்காலத்தில் இப்போட்டிகளே மட்டுநகரின் கால்பந்தாட்டத்தை வளர்த்தெடுத்தன. இந்த உள்ளூர் செவண சைட் போட்டிகளின் இயக்கு சக்திகளுள் ஒருவராக மகேசன் அவர்கள் இயங்கினார். குறிப்பாக போட்டி நடுவராக இவர் பங்களிப்பு நல்கி நல்ல கண்ணியமான கால்பந்தாட்டமும், கால்பந்தாட்ட வீரர்களும் உருவாக்கம் பெறுவதற்கு காரணமாக இருந்தார். மகேசன் அவர்களின் மத்தியஸ்தர் கடமையினை மிகப் பெரும்பாலான கழகங்களும் இரசிகர்களும் பெரு விருப்புடன் ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலை காணப்பட்டது. இந்தளவிற்கு சிறந்த நடுவராக அவர் மைதானங்களில் தனது கடமையினை நிறைவேற்றினார்.

மகேசன் அவர்களிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளுள் ஒன்று மைதானங்களில் சிறந்த கால்பந்தாட்டத்தை வெளிப்படுத்தும் வீரர்களை இனங்கண்டு அவர்களைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தும் மனப்பாங்கு ஆகும். இத்தகைய திறன் மிக்க வீரர்களுடன் நட்புக் கொண்டு அவர்களின் முன்னேற்றத்துக்கான

**துரைராஜா கௌரீசன்**

ஆலோசனைகளையும் வழங்கும் ஒரு மூத்த வீரராக இவர் வாழ்ந்தார். மகேசன் அவர்கள் தினமும் வெபர் மைதானத்தில் மாலை வேளைகளில் ஒரு விளையாட்டு வீரருக்குரிய மிடுக்குடன் காணப்படுவார். கால்பந்தாட்டம் மட்டுமன்றி தடகளப் போட்டிகளில் பயிற்சி பெறும் வீரர்களுடன் நட்புக் கொண்டு அவர்களை ஊக்கப்படுத்தும் ஒரு வீரராகவும் வாழ்ந்தார். ஒரு நாள் வெபர் மைதானத்தில் பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டிக்காகப் பயிற்சி பெற்ற வீரரரை (மட்டுநகரிலிருந்து தேசிய மட்டத்தில் பங்குபற்றிய ஓட்ட வீரர்) அணுகி போட்டியின் போது ஓடுகின்ற முதலாவது ஓட்டப் பாதையில் ஓடிப் பயில்வதை விடுத்து கடைசியாக உள்ள ஓட்டப் பாதையின் வழியாக ஓடிப் பழகுமாறு அறிவுறுத்தினார். இதன் பின்னர் நடைபெற்ற போட்டியில் குறித்த வீரரின் ஓட்ட வேகம் அதிகரித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு மகேசன் அவர்கள் சக விளையாட்டு வீரர்களுக்கு நல்ல ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி அவர்களை முன்னேற்றமடையச் செய்யும் நல்வழிகாட்டியாக செயற்பட்டார்.

மகேசன் அவர்கள் பங்குபற்றிய தாண்டவன்வெளி சுதந்திரன் விளையாட்டுக் கழகம் மட்டுநகரில் கால்பந்தாட்டத்தில் ஒரு கனவான் கழகமாகவே தன்னை அடையாளப்படுத்தியது. இக்கழகத்தில் விளையாடிய வீரர்கள் கனவான் பண்புகள் நிறைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். இப்பண்புகள் மட்டுநகரில் பல்வேறு கழகங்களிலும் கனவான் பண்புகள் கொண்ட வீரர்களின் உருவாக்கத்திற்கு சிறந்த முன்மாதிரியாக இருந்தமை மனங்கொள்ளத் தக்கது. இன்றைய மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மா.உதயகுமார் அவர்களும் இக்கழகத்தில் மகேசன் அவர்களுடன் பல போட்டிகளில் பங்குபற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மகேசன் அவர்கள் பின்னாட்களில் மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனராகவும் கடமையாற்றியிருந்தார். இவர் பயிற்றுனராக இயங்கிய காலத்தில் மண்முனை வடக்கு கால்பந்தாட்ட அணி மிகவும் பலம் வாய்ந்த அணியாகத் திகழ்ந்திருந்தமை யாவரும் அறிந்ததே. இவ்வாறு தனது வாழ்வில் கால்பந்தாட்டத்தைத் ஓர் அங்கமாகக் கொண்டு வாழ்ந்த மகேசன் அவர்கள் வெபர் மைதானத்தில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் விளையாடிய போது ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக இவ்வுலக வாழ்வை விட்டுப் பிரிந்தார். மரணமடைந்த தினம் காலை முதல் மாலை வரை கால்பந்தாட்டத்திலேயே அவர் ஈடுபட்டிருந்தார். காலை முதல் பிற்பகல் வரை சீலாமுனை யங்ஸ்டார் மைதானத்தில் நடைபெற்ற செவண சைட் போட்டியில் நடுவராகக் கடமையாற்றிய பின்னர் மாலை வேளையில் வெபர் மைதானத்தில் விளையாடியிருந்தார்.

இவ்வாறு கால்பந்தாட்டத்துடன் வாழ்ந்து மறைந்த திரு மகேசன் அவர்களின் நினைவுகளை மட்டுநகரின் கால்பந்தாட்டம் இலேசாக மறந்து விட முடியாது.

## முகத்துவாரம் லைற்ஹவுஸ் கழகம் நடத்திய 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான செவணசைட் சுற்றுப் போட்டி

### சம்பியனாகியது லைற்ஹவுஸ் அணி இரண்டாமிடம் யங்ஸ்டார் அணி

மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான 40 வயதிற்கு மேற்பட்ட வீரர்கள் பங்குபற்றும் செவண சைட் சுற்றுப் போட்டி கடந்த 04.11.2018 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முகத்துவாரம் லைற்ஹஸ் மைதானத்தில் லைற்ஹவுஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் முகத்துவாரம் லைற்ஹவுஸ் அணியும் சீலாமுனை யங்ஸ்டார் அணியும் மோதின இதில் 1:0 எனும் பேறினால் லைற்ஹவுஸ் அணி வெற்றி பெற்றுக் கொண்டது.


மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்பரன் அவர்கள் பிரதம அதிதியாகப் பங்குபற்றியதுடன் இவர் லைற்ஹவுஸ் அணிக்காக இறுதிப் போட்டி வரை விளையாடித் தனது ஆற்றலை வெளிக்காட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மிகவும் சுவாரசியமான அனுபவங்களையும், மூத்த வீரர்களின் பண்பான கால்பந்தாட்ட ஆற்றுகையினையும் இச்சுற்றுப் போட்டியினூடாகக் காண முடிந்தது.



பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## தீபாவளி தினத்தை முன்னிட்ட பூப்பந்தாட்டப் போட்டி



(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு விளையாட்டுக்கழகம் தீபாவளி தினத்தை முன்னிட்டு வருடாவருடம் நடாத்திவரும் காரைதீவு விளையாட்டுக்கழக கனிஸ்ட வீரர்களுக்கிடையிலான மென்பந்து சுற்றுப் போட்டியை காரைதீவு கனகரெட்ணம் விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சீரற்ற காலநிலை காரணமாக கனிஸ்ட வீரர்களுக்கிடையிலான மென்பந்து சுற்றுப் போட்டி இடம்பெறவில்லை. எனினும் பூப்பந்தாட்ட போட்டிகளின் இறுதி சுற்று போட்டிகள் தீபாவளி தினமன்று விபுலாநந்த மத்திய கல்லூரியின் உள்ளரங்கில் இடம்பெற்றது.

கழகத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இறுதி நிகழ்வுகளில் கழக போசகர், கழக சிரேஷ்ட கனிஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

20 வயதுக்குட்பட்டவர்கள், 21-40 வயதுக்குட்பட்டவர்கள், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஒற்றையர் இரட்டையர் போட்டிகள் இடம்பெற்று வெற்றிபெற்றவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டது.

# கலித்தொகை இன்பம்

## என்னை மறந்துவிடு, அவளுடனாவது இருந்துவிடு!

வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதநிலத்து மக்கள் உளவுத்தொழிலில் உயர்ந்து விளங்கினார்கள். போதிய வருமானம், பொழுது போக்குவதற்கு கிடைத்த அளவற்ற நேரம் என்பவற்றால் நிறைவான வாழ்க்கையிலே அவர்கள் மகிழ்ந்தார்கள். கலைகளிலே சிறந்தார்கள். களியாட்டங்களிலே மிதந்தார்கள். அத்தகையதொரு மருதநிலத்திலே காதல்வயப்பட்டு அவளும் அவனும் திருமணம் செய்து வாழ்ந்து வந்தார்கள். அளவற்ற வசதியும் வாய்ப்பும் அவனுக்கு வீட்டுச் சாப்பாட்டைவிட வெளிச் சாப்பாட்டில் விருப்பத்தை உண்டாக்கின. பரத்தையரை நாடினான். அவர்களோடு கூடினான். மனைவியை மறந்தான். வீட்டைத் துறந்தான்.



அவன் பரத்தையரோடு இன்புறுகின்ற செய்தியை ஊர்மக்கள் கண்டகண்ட இடங்களில் எல்லாம் கதைக்கத் தொடங்கினார்கள். அவர்களது அந்த ஏழனப் பேச்சுக்கள் அவளது செவிகளில் வந்து சேருகின்றன. அவை நெருப்பைவிடக் கொடுமையாக அவளைச் சுட்டெரிக்கின்றன. அவள் துன்பத்தில் துடிக்கின்றாள். அவ்வாறு அவள் வருந்திக்கொண்டிருக்கும்போது அவன் அவளைத்தேடி வீட்டுக்கு வருகிறான். அப்போதும்கூட நிரந்தரமாக அவன் வருவதாகத் தெரியவில்லை. அவனது தேர்ப்பாகன் வீட்டுக்கு வெளியே தேரை நிறுத்திவைத்தக்கொண்டு அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான். அவன் தன்னிடம் திரும்பி வருகிறான் என்றெண்ணி உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க அவனை வரவேற்பதற்காக ஓடோடி வாசலுக்கு விரைகிறாள். தேர்ப்பாகன் தெருவில் காத்து நிற்பதைக் காணுகிறாள். உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சி ஏமாற்றத்தில் கரைகிறது.

அவன் தேரிலிருந்து இறங்கி வரும்போது பரத்தையர் வீட்டில் அவன் இன்புற்றிருந்தமைக்கான அடையாளங்கள் அவனது உடலில் வெளிப்படையாகத் தெரிகின்றன. அவனது மாலையை அவனது கழுத்தில் காணவில்லை. மாறாக கசங்கிய பூமாலையொன்றை அவன் அணிந்திருக்கிறான். அதைக்கண்டதும் அவளுக்கு அவன்மீது கோபம் பிறக்கின்றது. வெறுப்பு உண்டாகின்றது. "நீ ஏன் இங்கு வந்தாய்? ஏதற்காக வந்தாய்? உன் உடலைப் பார்! அதிலே உன் பெருமை தெரிகிறது. உனது நடத்தை மிகவும் போற்றத்தக்கதாகவே இருக்கிறது." என்றெல்லாம் அவனைப் பார்த்து இகழ்ந்து பேசுகின்றாள். "என்னிடம் நீ காட்டுகின்ற அன்பிற்கு நன்றி. மிக்க மகிழ்ச்சி. நீ இப்போதே திரும்பிப் போகலாம். என்னைப் போல அந்தப் பரத்தையர்களையும் புறக்கணித்துவிடாமல் அவர்களிடமாவது ஒழுங்காக இருக்கப்பார்" என்று கூறித் திருப்பி அனுப்புகின்றாள். இந்தக் காட்சியை நமக்குக் காட்டுகின்ற பாடல் இதோ:

வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந்து ஊர்புகுந்த வரிவண்டு
ஓங்குயர் எழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகல் அல்கிக் கங்குலான்
வீங்குஇறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினுள் அரும்பு அவிழ் நறுமுல்லைப்
பாய்ந்து ஊதிப் படர்தீர்ந்து பண்டுதாம் மரீஇய
பூம்பொய்கை மறந்து உள்ளாப் புனல்அணி நல்ஊர்!
அணைமென்தோள் யாம்வாட அமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையாய் எனவந்த மல்லலின் மாண்பு அன்றோ
பொதுக்கொண்ட கவ்வையின் பூவணிப் பொலிந்த நின்
வதுவை அம் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை
கனலும் நோய்த்தலையும் நீ கனங்குழை அவரொடு
புனல் உளாய் எனவந்த பூசலின் பெரிதன்றோ
தார்கொண்டாள் தலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
ஈர்அணி சிதையாது எம்இல்வந்து நின்றதை
தணந்ததன் தலையும் நீ தளர்இயல் அவரொடு
துணங்கையாய் எனவந்த கவ்வையின் கடப்பன்றோ
ஒளிபூத்த நுதலாரோடு ஓரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தஇக் கவின்காண இயைந்ததை
அளிபெற்றேம் எம்மைநீ அருளினை விளியாது
வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனும்
நீட்டித்தாய் என்று கடாஅம் கடும்திண்தேர்
பூட்டு விடாஅ நிறுத்து
(கலித்தொகை, மருதக்கலி பாடல் இல: 1 பாடியவர்: மருதன் இளநாகனார்)

### நேரடிக்கருத்து:

வயல்களால் நிரம்பப்பெற்றது மருத நிலம். வற்றாத குளங்கள் அங்கே உள்ளன. அந்தக் குளங்களிலே தாமரைகள் நிறைந்த பொய்கையிலே மலர்ந்திருந்த தாமரை மலரில் வரிவண்டு ஒன்று அமர்ந்திருந்து தேனுண்டு களிக்கின்றது. பக்கத்திலேயுள்ள வயல்களிலே குவளை மலர்கள் பூத்திருக்கின்றன. பூக்காரிகள் வந்து அந்தக் குவளை மலர்களைப் பறித்தெடுத்துக்கொண்டு அவற்றை விற்பதற்காக ஊருக்கள் கொண்டு செல்கின்றார்கள். தாமரை மலரில் அமர்ந்து தேனருந்திக்கொண்டிருக்கும் வண்டு இப்போது குவளை மலர்களின் மேல் ஆசைப்பட்டு அவற்றிலே தாவி அந்த மலர்களோடு ஊருக்குள் வந்துவிடுகின்றது. அப்போது அந்த ஊரிலே இருக்கும் மிகப் பெரிய யானைகளின் மதநீர் மணம் அந்த வண்டைக் கவர்கின்றது. உடனே நீலநிறக் குவளை மலர்களை விட்டுவிட்டு மதநீரை நாடி வண்டு பறந்து போகின்றது. பகல் முழுவதும் அந்த வண்டு இப்படியே அங்கும் இங்குமாக மாறிமாறிக் களித்திருக்கின்றது.

மாலை வேளையாகின்றது. அந்த ஊர்ப்

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

பெண்கள் முல்லை மொட்டுக்களைத் தலையிலே சூடுகின்றனர். இரவுமுழுவதும் தத்தம் கணவரோடு கூடித் தழுவி இன்புற்றுக் கிடக்கின்றனர். அவர்களது தலைகளிலே சூடியிருந்த முல்லை மொட்டுக்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்றன. அந்த மணத்தினால் கவரப்பட்ட வரிவண்டு அங்கேயும் வந்து பெண்களின் கூந்தல்களை வட்டமிடுகின்றன. இவ்வாறு தங்கியிருந்த தாமரைப் பொய்கையை மறந்து கண்டகண்ட இடங்களிலெல்லாம் ஆசைகொண்டு பறந்துதிரியும் வண்டினைப் போன்றவன் நீ. நீர்வளம் நிரம்பப்பெற்ற ஊரைச் சேர்ந்தவனே! நான் சொல்வதைக் கேள்!

இங்கே பஞ்சணை போன்ற எனது தோள்கள் வாடி நான் வருந்திக் கிடக்கின்றேன். நீயோ இரவெல்லாம் பரத்தையரோடு கூடிக்கலந்து இன்புற்றுவிட்டு இப்போது இங்கே வருகின்றாய். நீ காமத்தின் வசப்பட்டு விட்டாய். ஊரவர்கள் எல்லாம் இழித்துப் பேசுகின்றார்கள். உனது பெருமையை எப்படிச் சொல்வது? அத்துடன் பரத்தையரோடு கூடிக்கிடந்த அடையாளங்களோடு இப்படி எனக்கு முன்னே வந்து நிற்கின்றாயே, இது மிகவும் பெருமைப்படத்தக்க காரியம் தான்!

நீ பரத்தையரோடு கூடி பொய்கையிலே நீர் விளையாட்டில் மகிழ்ந்திருக்கிறாய் என்று மற்றவர்கள் பேசுகின்ற பேச்சுக்களைக் கேட்டு எனது நோய் அதிகமாகி நெருப்பைவிடக் கடுமையாக என்னைச் சுட்டெரித்தது. அப்படியெல்லாம் நான் துடிதுடித்துக் கிடக்கும்பொழுது நீ இப்படி வந்து நிற்கின்றாய். உனது காம மயக்கத்தினால் உன் மாலையை எவளோ ஒருத்திக்குக் கொடுத்துவிட்டாய். அவள் தலையில் இருந்த பூமாலையை நீ அணிந்து கொண்டிருக்கிறாய். அதையெல்லாம் நீக்காமலே துணிவாக என் முன்னே வந்திருக்கும் உனது பெருமைக்குரிய நடத்தை நீ பரத்தையரோடு நீராடியதாக முன்னர் எழுந்த வதந்தியைப் பார்க்க மிகவும் சிறந்ததல்லவா?

ஏதோ இந்த நிலையிலாவது எங்களிடம் வந்து எனக்கு அருள்புரிந்தாயே! அந்த அளவில் நாங்களும் உனது அன்பினைப் பெற்றதாக மகிழ்கின்றோம். உனது பரத்தையர்களுக்கு மிகவும் வேண்டியவனான உனது தேர்ப்பாகன் பூட்டிவைத்த தேருடன் வெளியே காத்துக்கொண்டு நிற்கின்றான். இங்கே நீ தாமதித்தால், உன்னிடம் சொல்லாமலேயே அவன் சென்றாலும் சென்றுவிடுவான். அதனால் இப்போதே போய்வா. பரத்தையரோடு உனக்குள்ள உறவாவது என்னோடு கொண்டிருந்த உறவைப்போல அறுந்துவிடாமல் இருக்கட்டும். இப்போதே சென்று அந்த உறவையாவது தக்கவைத்துக்கொள். (என்று கணவனைப் பார்த்து மனைவி கூறுவதாக அமைந்த பாடல் இது)

தொடர்ச்சி...

## மதுபாவனையில் உளநலம்

விழிப்புடன் செயற்பட்டு அவற்றை உரிய இடத்தில் முறையிடுவதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும்.அரசாங்கத்தின் வெளிக்கள வலைப்பின்னல் அமைப்புகள் மூலம் பொதுமக்களிற்கு மதுபான வகைகள்; பாவிப்பதை குறித்து ஊக்கமளிக்கும் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். குடிப்பதை குறித்தும் அதன்பின் ஏற்படுகின்ற நடத்தை மாற்றங்கள் குறித்தும் பொதுமக்கள் கொண்டிருகின்ற போலி நம்பிக்கைகளை இல்லாது செய்து அதனால் ஏற்படுகின்ற சமூக விரோத செயல்கள் குறித்து அறிவூட்டல்.சமூகத்தால் அங்கரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மதுபாவிக்கும் சம்பவங்களான திருமண வைபவம், மரண வீடுகள் போன்ற சமூக செயற்பாடுகளில் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான அறிவூட்டல்களை அரச பணியாளர்களான, ஆரம்ப சுகாதார உத்தியோகத்தர்கள் மூலமாக மேற்கொள்ளுதல். மதுபாவனைக்கு உட்பட்டுள்ள எல்லா மட்டத்தினரையும் அவற்றை குறைத்து நிறுத்துவதற்கு எப்போதும் ஊக்குவித்தல்.மதுபாவனையற்ற சமூகத்தை உருவாக்கும் நல்நோக்கோடு உள்ளூர் சட்டங்களை,உள்ளூராட்சி அமைப்புகள் மூலமாக ஏற்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்தல்.சமூக மட்டத்தில் மது பாவிக்கும் குடும்பங்களை உள்ளடக்கிய கழகங்களை உருவாக்கி அதன் மூலமாக மதுபாவனையால் ஏற்படுகின்ற தீவினைகள் குறித்த சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

# பெரிய நீலாவணையில் பட்ஸ் அமைப்பின் கல்வி உதவித்திட்டம்



லண்டனை சேர்ந்த மட்டக்களப்பு நலிந்தோர் அபிவிருத்தி சங்கத்தினால்(பட்ஸ்), பெரிய நீலாவணையில் நடத்தப்படவிருக்கும் தரம் 5 வரையிலான மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகளை நடத்துவதற்கான திட்டம் அண்மையில் விஜய தசமி அன்று ஆரம்பிக்கப்பட்டது.

பெரியநீலாவணையில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குடியிருப்புகளில் வாழும் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்காகவே இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் மட்டக்களப்பு மக்களின் அமைப்பான மட்டக்களப்பு நலிந்தோர் அபிவிருத்திச் சங்கத்தின் நிதி அனுசரணையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சுனாமியினால் பாதிதிக்கப்பட்ட இந்த வறிய மக்கள் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பகுதிகளில் இருந்து வந்து இங்கு குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். ஆனாலும், அண்மையில் இங்கு தாக்கிய மினி சூறாவளியாலும் இவர்களின் குடியிருப்புகள் பாதிக்கப்பட்டிருந்தன. இதனையடுத்தே இவர்களுக்கு உதவுவது குறித்து ஆராய்ந்த பட்ஸ் அமைப்பு இந்த கல்வி ஊக்குவிப்பு திட்டத்தை ஆரம்பித்துள்ளது.







# மட்டு மாநகர சபை

## மட்டு மாநகர சபையின் அனர்த்த கால முன் ஆயத்தக்குழு



கிழக்கு மாகாணத்தில் கடுமையான மழை பெய்து வரும் நிலையில், மட்டு மாநகர சபை பகுதியில் ஏற்படக்கூடிய அவசர நடவடிக்கைகளை கையாள்வதற்காக மட்டக்களப்பு மாநகர சபை முன் ஆயத்தக் குழு ஒன்றை அமைத்துள்ளது.





மழை காரணமாக நீர் தேங்கி வெள்ளம் ஏற்படக் கூடிய இடங்களில் நீரோட்டத்துக்கான தற்காலிக கால்வாய்களை வெட்டி, வெள்ளத்தை வடிந்தோடச் செய்யும் பணிகள் இந்தக் குழுவுக்கு ஒரு பெருத்த சவாலாக இருந்து வருகின்றது.

ஆயினும் கடுமையான முயற்சிகளின் மூலம் இந்த பணியை தாம் செய்து வருவதாக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கூறினார்.

நீர் வடிந்தோடும் வழிகளில் பொதுமக்கள் உரிய அனுமதியின்றி கடந்த காலத்தில் பெரிய கட்டிடங்களை கட்டி விட்டதால், பல இடங்கள் நீரில் மூழ்கும் அவலம் ஏற்பட்டுள்ளதாக மாநகர சபை கூறுகின்றது.

புதூர், இருதயபுரம், மாமாங்கம், பூம்புகார், கருவேப்பங்கேணி, மஞ்சந்தொடுவாய் ஆகிய இடங்களில் நீரை வடிந்தோடச் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மாநகர சபை கூறுகின்றது.

## மட்டுநகர் தினம் பிரகடனம்



"மட்டுநகர் தினம்" என்ற பெயரில் மட்டுநகரின் பெருமையை கொண்டாடுவதற்கான தினம் ஒன்றை நிர்ணயிப்பது குறித்து மாநகர சபை முடிவு செய்துள்ளது.

மாநகர சபையின் 11வது அமர்வின் போது மட்டக்களப்பு மாநகரத்துக்கென ஒரு தினத்தை நிர்ணயித்து, அதனை "மீன்பாடும் தேன்நகராம் - மட்டுநகர் தினம்" என்ற பெயரில் அனுட்டிக்க வேண்டும் என்று பிரகடனப்படுத்தப்பட்டது.

முதல்வர் தி. சரவணபவனினால் முன்மொழியப்பட்ட இதற்கான பிரேரணை சபையில் ஏகோபித்த ஆதரவுடன் அங்கீகரிக்கப்பட்டது.

எமது மாவட்டத்தின் கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் இந்த தினத்தை இரு நாட்களுக்கு அனுட்டிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உரிய கலந்தாலோசனைகளின் பின்னர் இந்தத் தினம் பற்றிய மேலதிக விடயங்கள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும்.

**லியோண்**

## ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

தொடர்ச்சி...

## மட்டக்களப்பில் வெள்ளத்தால் 6500க்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்தனர்

ஒன்றும் நடைபெற்றுள்ளது. அனைத்து நிவாரணப் பணிகளும் அரச அதிபரின் ஊடாக ஒருங்கிணைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள நீர் தொடர்ந்து தேங்குவதை தவிர்க்குமுகமாக மட்டக்களப்பு கடலேரி கடலுடன் கலக்கும் முகத்துவாரம் நேற்று வியாழக்கிழமை வெட்டித் திறக்கப்பட்டது.

அதனை உடனடியாக திறப்பது சுற்றாடலுக்கு உகந்ததல்ல என்ற கருத்து வலுவாக முன்வைக்கப்பட்ட போதிலும், நகரின் பல பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட நிலையில், அதனை திறப்பது என்று இறுதியாக முடிவெடுக்கப்பட்டது. இதனால், ஒரு நாளைக்குள் வெள்ளம் வடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கிடையே, கடந்த சில நாட்களாக தாழ் அமுக்கம் காரணமாக தொடர்ச்சியாக பெய்த மழை வெள்ளிக்கிழமையுடன் குறைந்துவிடும் என்று வானிலை அவதான நிலைய அதிகாரி கே. சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது இடையில் வந்த மழை என்றும் இந்த ஆண்டுக்கான பருவ மழை டிசம்பர் மாத்திலேயே ஆரம்பமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 10

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### பதம்

• பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

1. 'அழுதான்' என்பதன் பகுதி
   (1) அழு (2) அழுது (3) அழுதல் (4) ஆன்

2. 'பார்த்துக்கொண்டான்' என்பதன் பகுதி
   (1) பார் (2) பார்த்து (3) பார்த்துக்கொள் (4) பார்த்துக்கொண்டு

3. 'போய்க்கொண்டிருக்கிறான்' என்பதன் பகுதி
   (1) போ (2) போய்க்கொண்டிரு (3) போய்க்கொள் (4) போய்க்கொ

4. 'கண்டான்' என்பதன் பகுதி
   (1) கண் (2) கண்டா (3) கண்டு (4) காண்

5. 'வருகிறான்' என்பதன் பகுதி
   (1) வரு (2) வருகி (3) வா (4) வ

6. 'கண்டான்' என்பதிலுள்ள இடைநிலை
   (1) ண் (2) ட் (3) ன் (4) டா

7. பின்வருவனவற்றுள் விகாரம் இடம்பெற்றுள்ள சொல்
   (1) வந்தான் (2) சிரித்தான் (3) ஓடுகிறான் (4) தொழுவான்

8. பின்வருவனவற்றுள் சாரியை வந்துள்ள சொல்
   (1) வாழைக்கறி (2) தாழங்குடா (3) அவ்வாறு (4) கலங்கல்

9. தசரதன் கொடுத்த வரத்தால் இராமன் காடேகினான். இங்கு 'வரத்தால்' என்பதிலுள்ள 'அத்து' என்பது
   (1) பகுதி (2) விகாரம் (3) பெயரிடைநிலை (4) சாரியை

10. 'ஊட்டியது' என்பதில் வந்துள்ள இடைநிலை
    (1) ஊட்டு (2) டி (3) ஊட்டி (4) இ

11. பின்வருவனவற்றுள் சாரியை இடம்பெற்றுள்ள சொல்
    (1) காட்டிற்கு (2) காட்டை (3) காட்டில் (4) காட்டிலிருந்து

12. பின்வருவனவற்றுள் சந்தி இடம்பெற்றுள்ள சொல்
    (1) வாழ்கிறான் (2) வாழ்வான் (3) அடித்தான் (4) படித்தல்

13. 'தாழ்ந்தது' என்பதில் வந்துள்ள சந்தி
    (1) ந் (2) த் (3) த (4) து

14. பின்வருவனவற்றுள் சாரியை இடம்பெற்றுள்ள சொல்
    (1) மண்முனைப்பற்றில் (2) அக்கரைப்பற்றில் (3) சிலவற்றில் (4) ஒற்றைப்பனை

15. பகுதி, விகுதி ஆகியன மட்டும் இடம்பெற்றுள்ள சொல்
    (1) வருக (2) கூனி (3) தின்பண்டம் (4) ஆகினான்

16. பின்வருவனவற்றுள் ஆறு உறுப்புக்களும் இடம்பெற்றுள்ள சொல்
    (1) கடந்தது (2) கடந்தான் (3) கடவு (4) கடப்பான்

17. பின்வருவனவற்றுள் விகாரம் இடம்பெறாத சொல்
    (1) செத்தான் (2) நடந்தனன் (3) அழுதனன் (4) வாழ்ந்தான்

18. 'போனான்' என்பதில் வந்துள்ள இடைநிலை
    (1) னா (2) னான் (3) இன் (4) ன்

19. 'செய்யும்' என்பதன் விகுதி
    (1) யும் (2) ம் (3) உம் (4) ய்யும்

20. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டும் சொல்
    (1) நாட்டுப்பற்று (2) தொடுத்தான் (3) கட்டளை (4) தொட்டான்

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குபரிசில் வழங்கப்படும். முடிவுத் திகதி : 15.11.2018.

அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

# கற்போம்

## புணர்ச்சி -விடை

'புணர்ச்சி' என்னும் தலைப்பில் சென்ற வார அரங்கத்தில் கேட்கப்பட்ட இருபது வினாக்களுக்கும் எவரும் முழுமையாக விடையளிக்கவில்லை. சரியான விடை இதோ :

| | | | |
|---|---|---|---|
| 1.(4) | 6. (1) | 11. (4) | 16. (2) |
| 2.(2) | 7. (4) | 12. (3) | 17. (2) |
| 3.(1) | 8. (3) | 13. (1) | 18. (1) |
| 4.(2) | 9. (4) | 14. (3) | 19. (4) |
| 5.(3) | 10. (2) | 15. (3) | 20. (2) |

முயற்சி செய்யுங்கள், பயிற்சி செய்யுங்கள் - வெற்றி தேடிவரும்
"முடியும் என்பது மூலதனம் - முடியாது என்பது முட்டாள்தனம்"

அக்கறை கொண்டு அரங்கம் தருகிறது

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலை கலாசாரபீடம்**
**புறநிலைக் கற்கைகள் அலகு**
**சான்றிதழ் கற்கைநெறி**

கீழ்வரும் சான்றிதழ் கற்கைநெறிகளுக்கான (Certificate Courses) விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி காரியாலயம், கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, செங்கலடி எனும் முகவரியிலிருந்து அல்லது எமது இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் (www.esn.ac.lk). பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையும் விண்ணப்பப் படிவம் மற்றும் கற்கை நெறிக்கான கட்டணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டினையும் எமது முகவரிக்கு 30.11.2018 முன்னர் அனுப்பி வைக்கவும்.
வங்கி இலக்கம் - 227-1001-9-0000390 (மக்கள் வங்கி)

மொழி மூலம் தமிழ்
காலம்: 3 மாதங்கள் (சனி, ஞாயிறு தினங்கள் மாத்திரம்)
கட்டணங்கள்: 1. விண்ணப்பபடிவ கட்டணம்: 100 /-
2. கற்கை நெறிக்கான கட்டணம்: 4000 /-

கற்கைநெறிகள்:
* அலுவலக முகாமைத்துவம் **(Office Management)**
* தொடர்பாடலுக்கான ஆங்கிலம் **(English for Communication)**
* ஆற்றுப்படுத்துகை **(Counselling)**
* இதழியல் **(Journalism)**
* அனர்த்த முகாமைத்துவம் **(Disaster Management)**
* உளவியலும் ஆளுமை விருத்தியும் **(Psychology and Personality Development)**

*மேலதிகவிபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 0718199498, 0652240490/0652240971.*
குறிப்பு: தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communication), ஆற்றுப்படுத்துகை (Counselling),அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management) ஆகியவை சனிக்கிழமையிலும்

அலுவலக முகாமைத்துவம் (Office Management), இதழியல் (Journalism), உளவியலும் ஆளுமை விருத்தியும் (Psychology and Personality Development) ஆகியவை ஞாயிற்றுக் கிழமையிலும் நடைபெறும்.

புறநிலைகற்கைகள் அலகு,
பீடாதிபதி காரியாலயம்,
கலை கலாசாரபீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
பதிவாளர்.

பக்க அனுசரணை





# தீபாவளி என்னும் விளக்கொளி விழா நாம் அறியாத கதை

தீபாவளி கொண்டாடி முடிந்தகையோடு உங்களுக்கெல்லாம் ஒருசெய்தி சொல்லவேண்டும். தமிழுலகைப் பொறுத்தவரை முக்கியமான பண்டிகைகள் மூன்று. சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி மற்றும் தைப்பொங்கல். இதைச்சொல லத்தானாஇந்தக்கட்டுரைஎழுதினாய் என்றுசலித்துக்கொள்கிறீர்களென்றா ல், அதுதான்இல்லை. நம் தமிழ் கூறும் நல்லுலகைப் பொறுத்தவரை இந்த மூன்று பருவ காலங்களிலுமே மறந்தும் கூட இணையப்பக்கம் தலை வைத்துப் படுக்கக்கூடாது. போனாலும் பேசாமல் வாயை மூடிக்கொண்டுவந்துவிட வேண்டும்.

சித்திரை வருடப்பிறப்பின் போது, யாரோ ஒரு பகுத்தறிவுவாதி, "அது ஆரியப்புத்தாண்டு. கொண்டாடும் நீங்களெல்லாம் ஆரிய அடிவருடிகள்" என்று சபித்துக் கொட்டிக்கொண்டிருப்பார். தீபாவளி வந்தால், யாராவது முற்போக்குவாதி ஒருவர் "ஆரியப்பண்டிகையைக் கொண்டாடும் முட்டாள்களே, வீணாக பட்டாசு கொளுத்தி சூழலை மாசுபடுத்தாதீர்கள்" என்று முழங்கிக் கொண்டிருப்பார். தைப்பொங்கல் வந்தாலோ, இன்னொரு மேதாவி வந்து பொங்கல் பொங்குவோரின் அகப்பையைப் பறித்து எறிந்துவிட்டு, "அதையெல்லாம் பிறகு பார்க்கலாம். இன்று தான் தமிழ்ப்புத்தாண்டு. இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள், இதைப் பிடியுங்கள்" என்று பூங்கொத்து கொடுப்பார்.

என்னநகைச்சுவை என்றால், தமிழ்ப்பண்பாடு எனும்போது, "ஆரியன், ஆரியன்" என்று கதறி அழும் இவர்கள் தான், ஆங்கிலப்புத்தாண்டில் 12 மணி வரை விழித்திருந்து முதல் ஆளாக வாழ்த்துச் சொல்பவர்கள். வெளிநாட்டில் தன் உறவினர் மகன் ஹலோவீன் கொண்டாடும் போது, பெருமையாக சமூக வலைத்தளங்களில் அவனது புகைப்படத்தைப் பகிர்வார்கள். ஆரியன் என்றால் கசப்பது, ஆங்கிலேயன் என்றால் இனிக்கிறதா என்று கேட்டால், அதற்குப் பதில் இருக்காது. இவர்களையெல்லாம் எந்த வகையறாவில் சேர்ப்பதென்றே தெரியாமல் இருக்கும்.

பண்டிகைகளைப் பஞ்சாங்கம் பார்த்தே கொண்டாடும் நாம் முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஆயிரம் தான் புராண, சமய நம்பிக்கைகளைச் சொல்லிக் கொண்டாலும், பண்டிகைகளுக்குப் பின் உள்ளது காலநிலையும் புவியியலும் தான். அதனால் தான் பழங்கால காலக்கணிப்புக் கருவியான பஞ்சாங்கத்தை வைத்துக் காலம் கணித்து இவற்றைக் கொண்டாடிவருகிறோம். அதிலும் புவியியல் என்பது மிக முக்கியமானது. இந்தப் புவியியலும் காலநிலையும் சம்பந்தப்படுவதாலேயே இலங்கையின் வேறெந்தப் பகுதியிலும் அனுஷ்டிக்கப்படாத ஆடிப்பிறப்பு, வட இலங்கையில் மட்டும் கொண்டாடப்பட்டது. கிழக்கிலங்கையின் பட்டிப்பொங்கலானது, தைப்பொங்கலை அண்டி அமையாமல், தைப்பூசமன்று கொண்டாடப்பட்டது.

சரி, என்றால் தீபாவளி தமிழர் பண்டிகை இல்லையா? அதற்கும் புவியியல் - காலநிலைக்கும் தொடர்பு இருக்கிறதா?

தீபாவளி மட்டுமல்ல; தமிழர் என்ற இன்றைய வரையறையைத் தூக்கிக்கொண்டு நாம் பழங்காலத்துக்குச் சென்றோமென்றால், பல பண்டிகைகளை நாம் உரிமைகோரவே முடியாது. இன்னும் பல பண்டிகைகளை அந்தக்காலத்தில் காணவே முடியாது. சங்க இலக்கியங்களில் தைப்பொங்கல் பற்றியோ, சித்திரைப்புத்தாண்டு பற்றியோ, தீபாவளி பற்றியோ, எங்குமே நேரடிக்குறிப்புகள் இல்லை. அதேவேளை சங்க இலக்கியங்களில் நேரடியாகக் குறிப்பிடப்பட்ட தைநீராடல், இந்திரவிழா முதலிய விழாக்களை நாம் இன்று கொண்டாடுவதில்லை. இடைப்பட்ட காலத்தில் சம்பந்தர் குறிப்பிட்ட ஐப்பசி ஓண விழா பற்றியோ, ஆண்டாளும் மணிவாசகரும் குறிப்பிட்ட பாவை நோன்பு பற்றியோ நமக்கு இன்று எதுவும் தெரியாது. ஆக, காலமாற்றத்தோடு ஒவ்வொன்றும் மாறிக்கொண்டே இருக்கிறது. சமயம் கடந்து இன்று கிறிஸ்மஸ் காலத்தில் பலரும் நத்தார் மரம் வைக்கிறோம். கிறிஸ்தவப் பின்னணியில் உருவான ஆங்கிலப்புத்தாண்டைக் கொண்டாடுகிறோம். வடநாட்டுப் பண்பாட்டு வரவால், ஹோலியையும் ரக்‌ஷாபந்தனையும் கொண்டாடும் வழக்கமும் நம் மத்தியில் பரவி வருகின்றது. இதையெல்லாம் இந்தப் பண்பாட்டுத் தூய்மைவாதிகள் போராட்டம் செய்து தடுத்து விடுவார்களா? அப்படியே தடுக்கத்தான் முடியுமா? இப்படியெல்லாம் கேட்பதால், பண்பாட்டு அடையாளங்கள் வேண்டாம் என்று சொல்வதாக விளங்கிக்கொள்ளக்கூடாது. புதுப்புதுக் கொண்டாட்டங்கள் அறிமுகமாக, பழைய வழக்கங்கள் அருகியும் மறைந்தும் போகின்றன என்ற புரிதல் நமக்கு இருக்கவேண்டும். அது காலமாற்றத்தில் இயல்பு தான். முடிந்த வரை நாம் காப்பாற்ற முயலலாம். இல்லாவிட்டால் அது அழிந்தொழிந்து போவது இயற்கையின் நியதி என்று பணிந்து பிரியாவிடை கொடுக்கலாம். பல்லாயிரக் கணக்கானோர் பங்கெடுக்கும், 'பண்பாடு' என்ற பிரமாண்டத்தின் முன்னிலையில், வெறும்ஒற்றைஆளாக நாம் செய்யக்கூடியது அது மட்டுமே.

சரி. தலையங்கத்துக்கேவருவோம். தீபாவளி உண்மையிலேயேதமிழர்பண்டிகைஇல்லை யா? அதுஎப்போது வழக்கத்துக்குவந்தது?

தீபாவளிபற்றியவரலாற்றுக்குறிப்புகள்த மிழகத்தைவிடவடஇந்தியாவிலேயேஅதி களவுகிடைக்கின்றனஎன்பதுஉண்மையே. பதினெட்டுப் புராணங்களின் பட்டியலில் இடம்பெறும் காந்தபுராணம், பத்மபுராணம் என்பனவற்றில்தீபாவளிபற்றியகுறிப் புகள் அவதானிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்புராணங்கள் பொதுவாக கிறிஸ்துவுக்குப்பின் ஆறாம் ஏழாம்நூற்றாண் டுகளில்முற்றுப்பெற்றவைஎன்பதுஆய்வா ளர்முடிவு. அதேபோல, ஏழாம்நூற்றாண்டில் வடஇந்தியாவை ஆண்டஹர்ஷர் என் றமன்னரால் எழுதப்பட்ட 'நாகானந்தம்' எனும் நாடகத்தில் தீபங்கள்ஏற்றப்படுகின்ற, புது மணத்தம்பதியர் பரிசுகளைப் பெற்றுக்கொள்கின்ற, ஒருபண்டிகைபற்றிய குறிப்புவருகின்றது. அப்பண்டிகையின் பெயர் "தீபப்பிரதிப தோற்சவம்"தமிழில்,



தலைமை விளக்கேற்றுவிழா. ஒருவேளை தலைத்தீபாவளியாகஇருக்குமோ?

பத்தாம் நூற்றாண்டில் மத்தி யஇந்தியாவை ஆண்ட இராஷ்டிரகூடமன்னர் மூன்றாம் கிருஷ்ணரின் செப்பேடு ஒன்றில், தீபோற்சவம்பற்றி யகுறிப்பு ஒன்றுவருகிறது. பதினோராம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகைதந்த அல்புரூணி எனும் பாரசீகஅறிஞர், கார்த்திகைமாத அமாவாசையில் இந்தியர்கள்தீபமேற்றி கொண்டாடுவதை விபரித்துள்ளார். தீ போற்சவம்பற்றிக்குறிப்பிடும்பத்தாம்பதி னோராம் நூற்றாண்டுசமணசமயக்கல் வெட்டுகளும் வடஇந்தியாவில்கிடைத்திரு க்கின்றன. பிற்காலத்தில்சமயபேதமின்றிவட இந்தியாவின்சைவர்கள், வைணவர்கள், சாக்தர்கள், சமணர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் எல்லோரும்கொண் டாடும்பெரும்விழாவாகதீபாவளிவ ளர்ந்திருக்கின்றது. தமிழகத்தைப்

மைங்கணான்மகிழறிவன்

பொறுத்தவரைதீபாவளிதொடர்பானமிகப் பழையசான்றுகள், நாயக்கர் காலக்கல் வெட்டுகள்தான். அதிலும்கி.பி 1623 – 1659 வரை மதுரையை ஆண்டதிருமலைநாயக்கரின் காலத்திலேயே தமிழகத்தில் தீபாவளி புகழ்பெறத்தொடங்கியது என்று ஆய்வுலகில் நம்பப்படுகிறது. என்றால் தமிழர் மத்தியில் தீபாவளிக்குவயதுநானூறுஆண்டுகள்கூட இல்லையா? என்றுநீங்கள்கேட்பதுபுரிகிறது. அதற்குமுன்தமிழர்மத்தியில்தீபாவளி யைவிடப்புகழ்பெற்றுவிளங்கியஇன் னொருவிழாவைப்பற்றிக்கூறவேண்டும். சங்கஇலக்கியங்களிலேயேகுறிப்புள்ள, இன்றுவரைநீடிக்கின்றவிழாஒன்று. அதுஎ ன்னவென்றுதெரிந்துகொள்ளஅடுத்தவார ம்வரும்வரைகாத்திருங்கள். (தொடரும்)

தொடர்ச்சி...

# கொழும்பில் உச்சம் பெறும் அரசியல் நெருக்கடி

கலைப்பதாக இருந்தால் நான்கு வருடங்கள் நிறைவடைந்து ஆறு மாதங்கள் சென்றிருக்க வேண்டும். தற்போதைய நாடாளுமன்றம் மூன்றரை ஆண்டுகள் மாத்திரமே பூர்த்தி செய்திருக்கின்றது. அப்படி இல்லையேல் வாரவு செலவுத் திட்டம் தோல்வியடைய வேண்டும் அவ்வாறானதொரு சூழல் இல்லையேல் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. ஆகவேதான், மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கமா, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமா என்று சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஆனால் இந்த விடயம் குறித்து அரசியலமைப்பில் தெளிவற்ற நிலை இருப்பதனால் தற்போது மைத்திரிபால சிறிசேனவும் மஹிந்த ராஜபக்சவும் தமது சட்ட வல்லுநர்களுடன் ஆரய்ந்து வருவதாக உயர்மட்டத்தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, தமது பெரும்பான்மையை நிருப்பிப்பதற்காக மஹிந்த தரப்பும் ரணில் தரப்பும் கொழும்பில் மக்கள் செல்வாக்கை காண்பித்து வருகின்றன. கடந்த 2 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் நடத்திய பேரணியில் சுமார் 25 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் ஒன்று கூடியதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவித்திருந்தன. அதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை மஹிந்த தரப்பு கொழும்பு பத்தரமுல்லையில் நடத்திய பொதுக் கூட்டத்திலும் அதேயளவு மக்கள் ஒன்று கூடினர். இந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று எட்டாம் திகதி வியாழக்கிழமை கொழும்பு காலிமுகத்திடலில் இருந்து நாடாளுமன்ற வளாகம் வரை நடத்திய வாகனப் பேரணியில் பெரும்திரளான ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாறு இரு தரப்பும் தொடர்ந்து நடத்தும் ஏட்டிக்குப் போட்டியான பேரணிகள். பொதுக் கூட்டங்களினால் கொழும்பு நகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னரான சூழலில் கொழும்பில் ஒரு வகையான பதற்றமும் வர்த்தகர்கள் மத்தியில் நம்பிக்கையற்ற நிலையும் காணப்படுகின்றது.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ச பிரதமராக நியமிக்கப்பட்டமை ஆயுதங்கள் அற்ற சதிப் புரட்சியென சபாநாயகர் கரு ஜயசூரிய கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு கடந்த 5 ஆம் திகதி கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

## பெரும் தெய்வங்களும் வணக்க முறைகளும்

சென்ற வாரம் கூறிய சிறு தெய்வங்களை விட முருகன், சிவன், பிள்ளையார், திருமால், தேவி போன்ற பெரும் தெய்வ வணக்க முறைகளும் மட்டக்களப்பில் காணப்படுகின்றன. இக் கோயில்களில் ஆகம விதிப்படி பிராமணர்களே பூசை செய்கின்றனர். இக் கோயில்களில் தினப்பூசை நடைபெறுகிறது. ஆண்டுக்கொரு முறை தேரோட்டமும் திருவிழாவும் நடைபெறுகின்றன, பல சிறு தெய்வக்கோவில்கள் மெல்ல சமஸ்கிருத மயமாகவும் தொடங்கின. ஆரியமயமாக்கம் மட்டக்களப்பை ஆகிரமிக்கலாயிற்று. அவை தனியாகக் கூறப்பட வேண்டும். இப் பிராமணர்கள் பின்னாளில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்களாவர். எனவே இவ் வழிப்பாட்டு முறை மிகப் பிந்தி வந்திருக்க வேண்டும்.

## சாதிக்கு ஒரு தெய்வம்

மட்டக்களப்பிலே ஒவ்வொரு சாதியினருக்கும் ஒவ்வொரு தெய்வம் சிறப்பான தெய்வமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. முக்குவர், வேளாளர், தனக்காரர் ஆகியோர் தமது முக்கிய தெய்வங்களாக முருகன், கண்ணகி, சிவன், மாரியம்மன் ஆகியோரைக் கொண்டனர்.

சீர்பாதக் காரருக்கு முருகனும், கரையாருக்குக் கடல்நாச்சி அம்மனும், வண்ணாருக்கு பெரிய தம்பிரானும், பொற் கொல்லருக்குக் காளியும், நளவருக்கு நரசிங்க வைரவரும், வேடருக்கு குமாரரும் பிரதான தெய்வங்களாம்.

இவ்வண்ணம் ஒவ்வொரு சாதியினருக்கும் ஒவ்வொரு தெய்வம் பிரதான தெய்வமாக பெரும்பாலும் இன்றும் உள்ளன. இவ் வழமை முன்னாளில் இறுக்கமாகப் பேணப்பட்டது என்பதையும் அது மாகோன் எனும் மன்னனால் விதிக்கப்பட்டது என்பதையும் மட்டக்களப்பு மான்மியம் கூறும்

அரச அதிகாரம் விடுத்த சாதிக்கு ஒரு சமயம் (வழிபாடு) என்ற கட்டளை

இதனை நாம் சற்றுக் கணக்கிலெடுக்க வேண்டும். இன்ன இன்ன சாதிக்கு இன்ன இன்ன தெய்வம் என்பதை அரச அதிகாரம் கட்டளையிடுகின்றது. கலிங்க நாட்டிலிருந்து படையுடன் வந்து மட்டக்களப்பையும் வெற்றி கொண்ட, மாகோன் தனது அரசை இங்கு வலியுறுத்த, சமயத்தை துணையாகக் கொண்டான். கலிங்க மாகன் 1215 ஆம் ஆண்டளவில் அதாவது 13 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், அக்காலத்தில் இலங்கையின் தலைநகரமாக விளங்கிய பொலநறுவையைக் கைப்பற்றி 40 ஆண்டுகள்வரை ஆண்டவன் ஆவான். பாளி மொழியிலுள்ள சிங்கள வரலாற்று



நூல்கள், "மாகன்" கலிங்க நாட்டிலிருந்து 24,000 வீரர்களைக் கொண்ட படையுடன் இலங்கையில் இறங்கியதாகக் கூறுகின்றன. பௌத்த மதத்துக்கு எதிரான இவனது ஆட்சி, இலங்கை வரலாற்றில் பெரும் தாக்கங்களை உருவாக்கியது ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தி அரச பரம்பரையை உருவாக்கியவனும் இவனே என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஏற்கனவே இங்கு சாதி அமைப்பு தளர் நிலையில் இருந்ததாயினும் அச் சாதி அமைப்பை இறுக்கி சமயம் மூலம் சட்டமாக்கியவன் அந்நிய நாடொன்றில் இருந்து இங்கு ஆதிக்கம் செலுத்த வந்த இந்த மாகோனே.

சாதி அமைப்பைப் பேணச் சமயம் இங்கு ஓர் கவசமாகின்றது. இதனை மட்டக்களப்பு மான்மியம் கூறும்.அன்று உருவான புதிய சமூக அமைப்பிற்கு இது தேவைப்பட்டது,

உழவருக்குச் சிவனாம் உடுக்கு மாரி அம்மன் நழவருக்கு வைரவராம் நாடார்க்குக் கண்ணகையாம் தொழுவருக்குப் பிதிராம் தொண்டர்க்கு வேலவனாம் மழவருக்கு வீரபத்திரன் மறையோர்க்கு நான்முகனே வேந்தருக்கு மாலாம் வேடருக்குக் கன்னிகளாம் ஏந்துபணி செய்வோர்க்கு காளியாம்- நேந்து வைக்கின் முட்டன் முடுவன் முனிவரெவர் ஆர் வரினும் பட்டமது கட்டி வைத்தான் பாண்டி மன்னன். என்ற சாதித் தெய்வக் கல்வெட்டாலறியலாம்.

இக்கல்வெட்டை நுணுக்கமாக நோக்கினால் ஏற்கனவே இருந்த தெய்வ வணக்க முறைகள் ஏற்கப்படுவதையும் புதிய தெய்வங்கள் விதிக்கப்படுவதையும் கண்டுகொள்ளலாம். ஏற்கனவே வேடரிடம் பிதிர் வணக்கம்( உத்தியாக்கள் வணக்கம்) இருந்தமையை முன்னர் கூறியுள்ளேன். இங்கு தொழுவர் என்பது அப்பழம் குடிகளையே அப்பழம் குடிகளிடம் இருந்த வழிபாடு பேரரசனான மாகோனால் தொடர்ந்தும் அனுமதிக்கப்படுகிறது இதில் கூறப்படும் தொண்டரும் பழங்குடிகளே அவர்களுக்கு முன்னர் இருந்த படி வேலன் வணக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது

அதேபோல வேடரிடமிருந்த ஒரு தொகைக் கன்னிமார் வணக்கம் (மாநீலியா, மறமுந்த, குருவிலிமுந்த, எரிகணுமுந்த, முக்காட்டுத் தெய்வம், ஆலாத்தித் தெய்வம்) அவர்களிடமே விடப்பட்டன.

சிலசாதிகளுக்குச் சில தெய்வங்கள் கொடுக்கவும்பட்டன. 13ஆம் நூற்றாண்டில் தெய்வ வணக்க முறை மட்டக்களப்பில் சாதிஅமைப்புடன் அதிகார மையம் கொண்ட அரசன் ஒருவனால் சட்டமாக்கப்படுகிறது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

13 ஆம் நூற்றாண்டிலிருந்து இதுவே அரச மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பில் இறுக்கமான ஓர் நில மானிய அமைப்பும் உருவானது. இற்றைவரை அது தொடர்கிறது. ஆனால் மாற்றம் என்பது பொது விதியல்லவா? காலம் இதில் மாற்றம் கொணர்ந்தது.

நான் முன்னர் கூறிய, ஒரு காலத்தில் இச் சாதித் தெய்வ வணக்க முறை பேணப்பட்டிருப்பினும் பிற்காலத்தில் காலம் மாற மைய அதிகாரம் தகர இவை மாறி யிருக்க வேண்டும் என்பதை இன்றைய மட்டக்களப்பு வணக்கமுறை உணர்த்துகிறது. நாடார்க்குரியதாகக் கூறப்பட்ட கண்ணகி வணக்க முறை முக்குவர், வேளாளருக்கும் கரையாருக்கும் ஏனையோருக்கும் ஆனது, மறையோர்( பிராமணர்) தமக்குரிய நான்முகனை விட்டு வேறு பெரும் தெய்வங்களை வணங்கினர். ஏந்து பணி செய்வோர்க்கான காளி வணக்கம் எல்லோரிடமும் சென்றது முக்கியமாக பொற்கொல்லரிடமும் வண்ணாரிடமும் சென்றது. இவை மாகோன் அரசு தகர்ந்தபின் ஏற்பட்ட மாற்றமாகும். மைய அரசு தகர விளிம்பு நிலையில் இருந்தோர் சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தமையினால் இது ஏற்பட்டதெனலாம், அரசு தகர்ந்தாலும் அரசு ஏற்படுதிய சமூக அமைப்பு தொடர்ந்தமையினால் இவ்விதிகள் சில இடங்களில் தொடரவும் ஆயின.

மட்டக்களப்பின் திரௌபதை அம்மன் வணக்கம் இங்கு கூறப்படவில்லை. எனவே அது பின்னர் வந்ததாயிருக்கலாம்.



## எல்லாச் சாதியினரிடமும் பரவிய வணக்கமுறை

சாதிக்கு ஒரு தெய்வம் என்று முன்னர் விதிக்கப்பட்டிருப்பினும், பிரதானமான தெய்வத்திற்குரிய கோயிலிலேயே ஏனைய சிறு தெய்வங்களுக்கும் பந்தலிட்டு எல்லாத் தெய்வங்களையும் வணங்கும் வணக்க முறையை மட்டக்களப்பில் பெரும்பாலான சாதியாரிடம் காண முடிகிறது. உதாரணமாக வேடரிடம் காணப்பட்ட வதனமார் வணக்கமுறை நளவரிடமும், முக்குவரிடமும், கரையாரிடமும் காணப்படுகிறது.

முக்குவருக்குரியதான மாரியம்மன் வணக்கமுறை சகல சாதியினரிடத்தும் காணப்படுகிறது. எனினும் சில வணக்கமுறைகள் சிலரிடம் இல்லை. உதாரணமாக முக்குவர், வேளாளர் இன்று வணங்கும் கண்ணகி அம்மன் வணக்கமுறை, அதிகார அடைவிற் குறைந்த வகுப்பினரிடையேயும் பொற்கொல்லரிடையேயும் இல்லை. அதே போல் வண்ணாரிடம் உள்ள பெரிய தம்பிரான் வணக்கம் உயர் சாதியினரென அழைக்கப்படுவோரிடம் இல்லை. இன்றைய இந்நடைமுறை ஒரு காலத்தில் ஒவ்வொரு சாதிக்கும் குறிப்பிட்ட தெய்வமும், வணக்கமுறையும் இருந்தது என்பதையும் பின்னாளில் சகல வணக்க முறைகளும் ஒரு குறிப்பிட்ட அளவு கலந்தன என்பதையும் காட்டுகின்றது.

இன்று இங்கு சாதி அமைப்பில் மிகத் தாழ்நிலையிலுள்ள சாதியினர் என கருதப்படும் சாதியினர் தொடக்கம் உயர்நிலையிலுள்ள சாதியினர் என கருதப்படும் சகல சாதியினரும் வணங்கும் பொதுத் தெய்வம் மாரி அம்மனாகும். சிறு தெய்வங்களுள் வளர்ச்சி பெற்ற பெரும் தெய்வமாக மாரி அம்மன் காட்சி தருகிறது. மட்டக்களப்பின் பொதுத் தெய்வமாக மாரி அம்மன் திகழ்வது கவனிப்பிற்குரியது. பின்னால் வந்து சேர்ந்த சிவன், பிள்ளையார், முருகன் வணக்கங்களும் மாரிஅம்மன் போல பின்னாளில் பொதுத் தெய்வங்களாயின. புராதனத் தெய்வங்களும் வழிபாடுகளும் வளர்ச்சி பெற்ற தெய்வங்களின் வருகையினாலும், வழிபாடுகளினாலும் மாறுதல் பெறுதல் இயல்பு. தமிழ்நாட்டின் பண்டைய குறிஞ்சி நில வேடர் வணங்கிய வேலன் பின்னர் கொற்றவை சிறுவனாகியதும், சிவனுக்கு மனைவியாகத் தமிழ் நாட்டுக் கொற்றவை ஆக்கப்பட்டதும் இந்துமத வரலாறு தரும் செய்திகளாகும். மட்டக்களப்பு வழிபாட்டிலும் இந்நிலை நடந்தேறியது. சிங்கள மக்கள் மத்தியிலே புத்த மதம் வருமுன்னர் கிராமியச் சமயத்தைப் புத்த மதம் அணைத்தது என்பர் பேராசிரியர் சரத் சந்திரா. அதே போல மட்டக்களப்புப் பகுதியிலும் கிராமியத் தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் இந்துப் பெரு மதங்களான சைவ, வைஷ்ணவ வணக்கமுறைகள் அணைத்துக் கொண்டன. இந்த இணைப்பு இன்னும் ஆராயப்படவில்லை.இந்த இணைப்பிற்கான அரசியல் காரணிகளும் சமூகக் காரணிகளும் உண்டு,அவை பற்றிய ஆய்வு நம்மை மட்டக்களப்பின் சமூக ஆய்விற் கொணர்ந்து நிறுத்தும்.

( தொடரும்)

# விருந்தோ விருந்து

ஒரு காலத்தில் சோழனுடைய சபையில் நிறையப்புலவர்கள் இருந்தனர். எல்லோருமே கவியெழுதுகிறோம் என்று அங்கு வந்தவர்கள்தான். ஆனால் மன்னன் இவர்களுக்கு ஒருநாள் ஒரு பரீட்சை வைத்தான். அதாவது மறுநாள் காலையில் சபைக்கு வரும்போது நாலுகோடி பாடலை இயற்றி வரவேண்டும் என்பதுதான் அது. புலவர்களுக்கு தலை விறைத்து விட்டது. விடிவதற்குள் எப்படி நாலு கோடி பாடலை எழுத முடியும். எனவே மிக நொந்த நிலையில் அவர்கள் தெருவில் அழுது கொண்டு போனார்களா...வழியில் ஔவையார்.

'என்னப்பா! சோகமாக போகிறீர்கள்?' என்று கேட்டார்.

' தாயே எங்கள் மன்னனுக்கு என்ன நேர்ந்ததோ நாமறியோம்'

'அப்படி என்னதான் நடந்தது?'

'தாயே நாம் நாளைக் காலைக்குள் நாலுகோடி பாடல்களை கொடுக்கவேண்டும். எப்படிக் கொடுப்போம்';என்றனர் கவலையோடு.

'கவலையை விடுங்கள் அந்த நாலு கோடி பாடல்களை நானே தருவேன்' என்ற ஔவையார் மறுநாள் அவர்களோடு அரசவைக்குப் போனார்.

அரசனும் 'கவியைக் கொண்டு வந்தீர்களா' என்று கேட்க, ஔவையார் முன்வந்து பாடலை தருவதாகக் கூறினார்.

அந்தப்பாடல் இதுதான்,

மதியாதார் வாசல் மதித்தொருக்காற் சென்று மிதியாமை கோடிபெறும்

உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடிபெறும்

கோடி கொடுத்தாலும் குடிப்பிறந்தார் தம் நாக் கோடாமை கோடிபெறும். என்று பாடினார் ஆக நாலு கோடியையும் ஒரு பாடலில் வைத்து பரிசையும் வென்றார் என்பது வேறு கதை.

கண்ட இடத்திலயும் கை நனைக்காத பழக்கம் சாதிய அடிப்படையில மட்டுமல்ல சுத்தம் சுகாதாரம் பேணுவதற்கும் உதவியது. நாங்கள் மச்சம் மாமிசம் எடுக்கமாட்டம் அவைபகுதி மச்சம் பிழங்கிறவையாம் என்றால் கலியாணம் பேச முடியாது. ஆம் சாதகப் பொருத்தம் போல இதுவும் இருந்தது. எனது சின்ன வயதில் நாங்கள் எங்கள் வீட்டைவிட்டு வெளியே எங்கும் சாப்பிட்டதில்லை. உறவினர் வீடுகள்தவிர. என் தந்தை இதில் கண்டிப்பாக இருந்தார். என்வீட்டில் மட்டுமல்ல பல வீடுகளில் இது நடைமுறையில் இருந்தது. ஒரு கலியாண வீடு, சாமத்தியவீடு, செத்தவீடு வந்தா பந்தியில இருக்கிறவை உறவுக்காரர்தான். எல்லாரும் எல்லா விட்டிலும் கை நனைக்க மாட்டினம்.

மற்றது துடக்கு உரித்துக்காறர் மட்டுந்தான் துடக்குவீட்டில சாப்பிடுவினம். மற்றவை முப்பத்தொண்டு கழிச்சுத்தான் பெண்டுகள் கூடி சமைப்பினம். ஆனா சமையல் முடிய அவரவர் வீட்டுக்குப் போயிருவினம். பின்ன ஐயர் வந்து படையல் போட்டு முடிய வீடுவீடாப்போய்

'வாருங்க எப்பன் சாப்பிட்டிட்டுப்போங்க' என்று பவ்வியமாக மீண்டும் அழைக்க வேண்டும். அவர்கள் வந்து சாப்பிடும் போது அருகிலிருந்து

'இன்னும் எப்பன் குழம்பு விடட்டே....'

**தமிழ்க்கவி**

'என்ன உப்புப்புளி கணக்கா இருக்கே'

'இருங்க இன்னும் எப்பன் சோறு ...'

'இதென்ன சாப்பாடு பருப்பில் கொஞ்சம் போடுறன்.'

'ம்ம் பொரியல சாப்பிடவேயில்லை'

'எடஎட விடுங்கோ அதெல்லாம் நாங்க எடுப்பம் இலைய வையுங்க'

இப்படி வீட்டுக்காரர்களின்



உபசரிப்பு திக்குமுக்காட வைக்கும். சாப்பிட்டவருக்கோ வயிறு மட்டுமல்ல மனமும் நிறைந்திருக்கும். வழிப்போக்கர்கள் களைத்துப் போய் வந்தாலும் அல்லது அறிமுகமற்றோராக இருந்தாலும் உணவு உண்ணும் நேரத்தில் வருபவர்களுக்கு உணவழித்தே உண்ணுவதும் குடிமக்கள் மரபு.

'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை. அட விடுங்க, அப்ப இப்ப நடைமுறையில உள்ள விருந்தோம்பல் பண்பாடு எப்பிடி எங்களிடம் வந்தது. அந்தப் புண்ணியத்தை வெளிநாட்டுப்பணம் வரமுதலே நம்மட சிறிமாவோ அம்மையார்தான் ஆரம்பித்து வைத்தார் என்பது எனது கருத்து. உங்களுக்கு தெரியாது 'சொந்தக்காறர் மட்டுந்தானே வருவினம் சாப்பிட.' என்ற கணிப்பில அரிசி போட்டிட்டு சாப்பிட வந்த சனத்தொகையால சாமம் சாமமா அரிசி கழுவின அனுபவம் எனக்கிருக்கு.

அம்மையாருடைய அரைக் கொத்தரிசி திட்டம் வந்த காலத்தில வக்கணையா நாலு கறிவைச்சு சமைச்சுச் சாப்பிட பொதுவாக யாராலும் முடியவில்லை. காசிருந்தாலும் பொருள் கிடைப்பதில்லை. ஆக இந்த சடங்கு வீடுகளில்தான் பல கறிவகைகளுடன் சாப்பாடு கிடைத்தது. கௌரவம் பசியை விட மேலானதில்லையே. கண்ட இடத்திலும் கை நனைக்காதவர்களும் இப்போது கைநனைக்கத் தயாரானார்கள்.

இதேசமயத்தில் இறந்தவருடைய உறவினர்கள் இறந்து போனவரின் பெயரால் தாம் தானமாக?! சாப்பாடு போட விரும்புவதால், வருபவர்கள் எதையும் கொண்டுவர வேண்டாம் என்று வேண்டுகோள் விட்டனர். அந்த வழக்கம் நடைமுறையாகி போலியான கௌவுரவத்தை வசதியற்றவர்களும் கடைப்பிடிப்பதை இப்போது காணலாம்.

கலியாண வீடா தாலிகட்டும் வரை காத்திராமல் சாப்பிட முண்டியடிக்கும் கூட்டம் தாமே பரிமாறி தாமே சாப்பிட்டுவிட்டு புகைப்படத்தில் ஆதாரம் வைத்து பரிசு கொடுக்கிறார்கள். இதற்காக யாரும் வெட்கப்படுவதில்லை. கலியாண வீட்டுக்கோ பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கோ போவோர் பரிசுகளுடன் போகிறார்கள் ஆனால் செத்தவீட்டுக்கு??? இழப்பு நடந்த வீட்டில் மேலும் இழப்பை ஏற்படுத்துகிறோம் முன்பெல்லாம் செத்தவீடு முடிந்து செய்யப்படும் அனைத்து சடங்கிலும் அயலவர்களின் பங்களிப்பே மேலோங்கியிருக்கும். இன்று அப்படி எதுவும் இல்லை என்பதுடன் மரணச்சடங்கிலும் வருபவர்களுக்கு பரிசு கொடுக்கும் பழக்கத்தையும் ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். செல்விருந்தோக வரு விருந்து பார்த்திருக்கும் வளநாடர்களாக மக்கள் வாழ்ந்த காலம் மறுபடி வருமா? கழுநீர்பாய்ந்து வயல்விளையும் வளநாடன்' என மன்னர்களைப் பாடிய காலம் இனிவருமா? வீடு தேடி வரும் விருந்தாளிகளை வீட்டில் உட்கார வைத்துவிட்டு வேலைக்குப் போகும் சம்பிரதாயம் நடைமுறைக்கு வந்துள்ளதே...

'விருந்து புறத்ததாகத் தானுண்ணல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று' என்றார் வள்ளுவர். இப்ப அப்பிடியா நடக்குது. வருகிற விருந்தாளிகளே இதைப் பொருட்படுத்துவதேயில்லை. விருந்துகளை அட உண்மையான விருந்துகளை கண்டு கனகாலம்.

---

தொடர்ச்சி...

## வியாழேந்திரன் மீது வீசப்படும் துரோகி பட்டங்களும் அவரின் அரசியல் எதிர்காலமும்.

மாவட்டத்தில் ஒரு உறுப்பினரை தான் பெற முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை இரண்டாம் மூன்றாம் நிலைக்கு தள்ளி சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் முதலிடத்திற்கு வர முடியாது.

ஒரு உறுப்பினரை மட்டும் பெறக் கூடிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து யார் தெரிவு செய்யப்படுவார். ஹிஸ்புல்லாவா, பிள்ளையானா, வியாழேந்திரனா என்ற கேள்வி வருகின்ற போது ஹிஸ்புல்லாதான் விருப்பு வாக்கில் அதிகம் பெற்று அந்நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தம்வசப்படுத்திக்கொள்வார் என்பது எல்லோருக்கும் தெரியும். இது தான் கடந்த கால வரலாறும் கூட. சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலோ அல்லது ஐக்கிய தேசியக்கட்சியிலோ தமிழர்கள் போட்டியிட்டால் அவர்களால் அக்கட்சிக்கு வாக்குகளை பெற்றுக்கொடுத்து முஸ்லீம் ஒருவரை உறுப்பினராக தெரிவு செய்ய வழி ஏற்படுத்துவார்களே ஒழிய தமிழர்களால் வெற்றி பெற முடியாது.

தேசியப்பட்டியலிலும் கருணா பிள்ளையான் வியாழேந்திரன் என யாராவது ஒருவருக்குத்தான் வாய்ப்பு கிடைக்கலாம்.
எனவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் வியாழேந்திரனின் பாராளுமன்ற எதிர்காலமும் அரசியல் எதிர்காலமும் கேள்விக்குறிதான்.

தமிழ் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு மாறிய ஒருவர் மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வரலாறு இதுவரை இல்லை.

---

தொடர்ச்சி...

## அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற வீரமுனை சுதர்சன்

உயல்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் செயலாளர்,அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர், வலஸ்முல்ல பிரதேச செயலாளர் போன்ற பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது எழுத்தாளர் அருளானந்தம் சுதர்சன் அவர்களின் 'சிறுவர் கவிப்பாக்கள்' எனும் கவிதைத்தொகுதி தேசிய ரீதியில் முதலிடம் பெற்றதால் அது அமைச்சினாலேயே நூலுருவாக்கம் பெற்று அவரது கரங்களினாலேயே உயல்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருக்கும் ஏனைய கௌரவ அதிதிகளுக்கும் உத்தியோக பூர்வமாக வழங்கிவைக்கப்பட்டது. பின்பு அந்நூலுக்காக அவருக்கு விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## பின்தங்கிய கணபதிபுரட் மாணவி புலமைப்பரிசில் சித்தி



சம்மாந்துறை வலயத்தின் பின்தங்கிய மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப்பெற்ற ஒரேயொரு மாணவி மகேஸ்வரன் ருக்சிகா சித்திபெற்றுள்ளார். அதிபர் எஸ்.கிருபைராஜா மற்றும் கற்பித்த ஆசிரியர் பி.தவராஜாவுடன் புலமையாளர் ருக்சிகா பாடசாலையின்முன் நிற்பதைக்காணலாம்.

படம் காரைதீவு நிருபர் சகா.

## அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற வீரமுனை சுதர்சன்



காரைதீவு நிருபர் சகா

உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சினால் 2018 ம் ஆண்டுக்கான அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் சிறுவர் கவிதையாக்கம் பிரிவில் 'சிறுவர் கவிப்பாக்கள்' எனும் கவிதைத் தொகுதியை சமர்ப்பித்து தேசிய மட்டத்தில் வீரமுனையைச் சேர்ந்த அருளாநந்தம் சுதர்சன் முதலிடம் பெற்று இலங்கை அரசின் 2018ம் ஆண்டுக்கான தேசிய விருதை பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் சம்மாந்துறை பிரதேசசெயலகத்தில் பணியாற்றிவரும் அரசஊழியராவார். இவரது கவிதைகள் முதலிடம் பெற்றதோடு அவற்றை ஒரு புத்தகவடிவில் நூலாக்கி கல்வியமைச்சால் வெளியிட்டும் வைக்கப்பட்டது.

2018 ம் ஆண்டுக்கான அரச ஊழியர்களுக்கான தேசிய மட்டத்திலான ஆக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டிய உத்தியோகத்தர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு 2018.11.02 அன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள வலஸ்முல்ல தேசிய பாடசாலை அரங்கில் நடைபெற்றது.

தொடர்ச்சி... (பக்கம் -13 )

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனைக் கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை 3

### மதுபான வகைகளின் கையிருப்பு, கிடைத்தல் வழிமுறைகள் தொடர்பான விடயங்கள்.

மதுபாவனையற்ற ஒரு சமூகத்தை உருவாக்கும் உயர்ந்த நோக்கில் அவற்றின் கையிருப்பு, கிடைக்கும் வழிமுறைகள் என்பவற்றை நீண்டு நிலைக்கக்கூடிய முறையில் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளினூடாக மதுபாவனையில் ஏற்படுகின்ற நுகர்வோருக்கான தீவினைகளை கட்டுப்படுத்தல், மதுபான வகைகளை பதுக்கி வைத்திருக்கும் இடங்களை படிப்படியாக கண்டுபிடித்து குறைந்தது பத்து வருட காலப்பகுதியிலாவது அவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவான செயற்திட்டங்களை வகுத்தல், பொதுமக்களின், நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி என்பவற்றிற்கு தடையாக உள்ள மதுபாவனையைக் குறைப்பதற்கு குறுகிய கால, நீண்டகால திட்டங்களை வகுத்து செயற்படுத்தல், தேசிய போதைப்பொருள் தடுப்புச் சட்டத்திற்கு அமைவாக இருபத்தியொரு வயதிற்கு உட்பட்ட எவரும் மதுபான வகைகளை வாங்குவதற்கு தடைவிதித்தல், உல்லாச பயணிகளின் தங்குமிடங்களில் உள்ள மதுபான சாலைகளிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது அவ்விடயங்கள் பொதுமக்கள் செறிந்து வாழாத, நடமாடாத இடங்களாக இருப்பதை உறுதிப்படுத்திய பின்னரே அனுமதிப்பத்திரம் வழங்குதல், ஒரு விழாவிற்கான நுழைவுக்கட்டணத்தை மதுபோத்தல் ஒன்றை கொள்வனவு செய்வதன் மூலமாக இலகுவாக பெற்றுக்கொள்ளலாம் போன்ற சலுகைகளை இரத்துச் செய்தல், மதுபான சாலைகளின் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் போன்ற செயற்பாடுகளில் பொதுமக்களின் கருத்துக்களையும், உள்வாங்கி அதன் மூலமாக பொது மக்களின், நலனிலும், பாதுகாப்பிலும் அக்கறை செலுத்துதல். தற்காலிக மதுபானசாலைகளிற்கான அனுமதியை இரத்துச் செய்தல். சிறுவர்கள் அதிகம் நடமாடுகின்ற இடங்களில் உதாரணமாக - பாடசாலை விளையாட்டு போட்டிகளில் மதுபானங்கள் விற்பதை தடைசெய்தல். இளைஞர்களை கவரும், உள்ளீர்க்கும் விதமாக மதுபானங்கள் குறித்து வெளிவருகின்ற விளம்பரங்களை இரத்துச்செய்தல். உதாரணமாக, பழங்கள், ஏனைய மென்பானங்களிலும் குறிப்பிட்டளவு மதுசாரம் உண்டு என விளம்பரம் செய்தல்.

அரசியலோ, வேறு எந்த தலையீடுகளும் இன்றி பொதுமக்களின் பங்களிப்புடன் கள்ளச்சாரயத்தை கட்டுப்படுத்துவதற்கான நீண்டு நிலைக்கக்கூடிய செயற்திட்டங்களை வகுத்தல். ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும், இது தொடர்பான ஆக்கபூர்வமான செயற்திட்டத்தை உருவாக்கி அதனூடாக தகவல் அறிந்து செயற்படத்தக்க செயற்பாடுகளை ஆரம்பித்தல். கள்ளச்சாரயம் உற்பத்தி செய்தல், கடத்துதல், விற்பனை செய்தல் தொடர்பான நபர்களிற்கான தண்டனைகளை அதிகரித்தல். கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது வெளித்தலையீடுகளின் தாக்கத்தை குறைத்தல். சமூக மட்டத்தில் பணியாற்றுகின்ற சேவையாளர்கள், மதத்தலைவர்கள் ஊடாக கள்ளச்சாராய உற்பத்தி,விநியோகம், விற்பனை என்பவற்றை குறைப்பதற்கான பாதுகாப்பை கொடுத்தல்.

### மதுபாவனையில் இருந்து சமூகததின் எல்லா மட்டத்தினரையும் பாதுகாத்தல்.

பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்கள், வேலைத்தளங்கள். வீடுகளில் மது பாவிப்போர், பாவித்தோர் ஆகிய எல்லா பிரிவினரையும் பாதுகாப்பதற்கான விதிமுறைகள் மதுபாவனையால் ஏற்படுகின்ற வீட்டுவன்முறை, வீதிவிபத்துக்கள் என்பவற்றை குறைப்பதற்கான, பொருத்தமான சட்டவிதிகள் நிர்வாக முறைமைகளை வலுப்படுத்தல். சட்ட விதிமுறைகள் மூலம் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களில் மதுபாவனையை கட்டுப்படுத்தல் வன்முறைகள், சிறுவர் துஸ்பிரயோகம், தற்கொலை முயற்சிகளை குறைப்பதற்கு

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

பொருத்தமான எல்லா கொள்கைகள், செயல்திட்டங்களையும் ஒழுங்கிணைந்து செயற்படுத்தல். மருத்துவ சுகாதார துறை சாராத அமைப்புக்கள் மூலம் தனக்கும், ஏனையோருக்கும் தீங்கிழைக்கக்கூடிய மதுபாவனையாளர்களை இனங்கண்டு அவர்களை சிகிச்சைக்கு உட்படுத்துவது. இதற்கு சமூகசேவை உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவைகள் உத்தியோகஸ்தர்கள், பெண்கள். சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் ஆகியோரை பொது இடங்களிலும், வேலைத்தளங்களிலும் பயன்படுத்தல். பொது நிதியினை, அரச, பொது நிகழ்வுகளில் மதுபாவனைக்கு செலவிடுவதை கட்டுப்படுத்துதல். பொது இடங்களிலும், வேலைத் தளங்களிலும் மதுபாவித்தல் கண்டுபிடிக்கப்பட்டால், அது பொருத்தமான சட்டங்கள் மூலம் உரிய நபரிற்கான தண்டனைகள் வழங்குதல். அதிக மதுபாவனையால் ஒருவர் பாதிக்கப்படும் போது தொழில்தருனர், தொழிலாளிகள் அதை இனங்கண்டு மேலும் குடிப்பதையும், இவரால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் இடையூறுன்றி நடைபெறுவதையும் உறுதிப்படுத்தல்.

குடித்து விட்டு வாகனம் செலுத்துதல்.

குடித்து விட்டு வாகனம் செலுத்துதல், இயந்திரங்கள், பொறிகளை கையாழுதல்



என்பவற்றை இல்லாது செய்தல். வாகனம் செலுத்தும் சாரதிகளின் இரத்தத்தில் மதுபான அளவு கூடாமல் இருப்பதை உறுதிப்படுத்தல். வாகன ஓட்டுநர்கள் மதுபாவனையுடன் வாகனம் செலுத்துவதை தடுத்தல், கண்டுபிடித்தல் என்பவற்றிற்கான திறமையை காவல்துறையினர் கொண்டிருத்தல். குடித்துவிட்டு வாகனம் செலுத்துவதால் ஏற்படுகின்ற விபத்துகளில் காயப்படுபவர்களிற்கான இழப்பீட்டு கொடுப்பனவு, தண்டப்பணம் என்பவற்றிற்கான அறவீடுகளில் அதிகரிப்பை ஏற்படுத்தல். விபத்துக்களின் பின்னர் அனுமதிக்கப்படும், காயக்காரர்களின் குருதி மாதிரியில், மதுபானச் செறிவை கண்டறிவதற்கான வசதிகளை வைத்தியசாலைகளில் ஏற்படுத்தல்.

### சமூக மட்ட நடவடிக்கைகள்

மதுபாவனையற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்கோடு சமூகத்தில் உள்ள எல்லா பிரிவினரையும்,ஈடுபாட்டுடன் செயற்பட வைத்து மதுபாவனை என்பது கவர்ச்சியான செயல் அல்ல என்ற எண்ணத்தை ஏற்படுத்துதல். மதுபாவனையால் ஏற்படுகின்ற வெளிப்படையாக தெரிகின்ற, தெரியாத தீவினைகள் குறித்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவதோடு, உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல், மொத்த விற்பனை என்பவற்றிற்கான சட்டவிதிமுறைகளில் முன்னேற்றங்களை ஏற்படுத்துதல். சமூகத்தில் எல்லா பிரிவினருக்குமான அறிவூட்டல்களில் முக்கியமான மதுபான வகைகள் பாவிப்பது குறித்து ஊக்கமளிக்கப்படும் விதம், குறித்த காரணிகள் மது பாவிப்பதை தூண்டி, தொடர்ந்தும் குடிப்பதற்கு காரணமாக அமைகின்றது என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். மதுபாவிக்க ஆரம்பித்தல், தொடர்ந்தும் பாவித்தல் என்பன குறித்த அறிவூட்டல்கள் சிறுவர்கள், இளவயதினர், மது பாவிப்போர் அடங்கலாக யாவரிற்கும் கிடைக்க வழியேற்படுத்தல். தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் கண்காணிப்பின் கீழ் மதுபாவனை குறித்த சட்ட விதிகள் மீறப்படும் போது பொதுமக்கள்

தொடர்ச்சி... (பக்கம் -07 )

தொடர்ச்சி...

## மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி - சில அவதானங்கள்

அங்கு கற்கும் மாணவர்களுக்கு உணவளிக்க அன்னசத்திரம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும் கருதமுடிகிறது. குருக்கள் மடத்தில் வேதாந்த மடம் ஒன்று இருந்ததற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன என்பர்.

தவிர, மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழ்நாட்டு ஏடுகளும் புழக்கத்தில் இருந்து வந்துள்ளன. இத்தகைய ஏடுகளுள் இராமர் அம்மானை, பாரத அம்மானை அண்மையில் அச்சுருப்பெற்றுள்ளன. இவ்விடத்தில் "பாரத அம்மானை" யின் பதிப்பாசிரியர் தமது முன்னுரையிலே பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது. அதாவது வில்லி பாரத பேரிலக்கியம் அண்மைக்காலம் வரையிலும்கூட ஓலைச்சுவடுகளில் எழுதிப்படிக்கும் பரம்பரையொன்று இங்கு வாழ்ந்துள்ளது. வில்லி பாரதமெனும் பேரிலக்கியம் கல்விமான்களின் தேவையை நிறைவு செய்த அதே நேரத்தில் பொது மக்களின் தேவையை நிறைவு செய்வதற்கான பிறிதோர் இலக்கிய அமைப்பின் தேவையையும் அது ஏற்படுத்தியது எனல் வேண்டும். இத் தேவை கருதி தெரிவு செய்யப்பட்ட அமைப்பை கொண்டதே நாம் ஆய்வுக்கெடுத்துக்கொண்ட பாரத அம்மானை எனக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டவாறு சமய இலக்கியஞ்சார்ந்தனவாகவும் தமிழ் இலக்கியஞ்சார்ந்தனவாகவும், வாய்மொழி இலக்கியஞ் சார்ந்தனவுமான ஏடுகள் மட்டுமின்றி தத்துவம் சார்ந்த ஏடும் மட்டக்களப்பு பிரதேசத்தில் வழக்கிலிருந்து வந்துள்ளமை விதந்துரைக்கப்பட வேண்டியதாகும், அண்மையில் பதிப்பிக்கப்பட்ட சுருதி நூல் என்பது குறிப்பிடத்தக்கது. பதிப்பாசிரியர் தமது உரையில் இவ்வாறு தெரிவிப்பது எமது சிந்தனைக்குகந்த விடையமாகிறது:

"மறைந்து போன தமது நெருங்கிய உறவினர் ஒருவரின் ஞாபகார்த்தமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நூலைப் பிரதி செய்து வைக்கும் ஒரு நல்வழக்கம் மட்டக்களப்பிலும் வழக்கிலிருந்து வந்துள்ளது. வேலாயுதர் வீரப்பத்திரன் அவர்கள் தமது தாயார் கண்ணமையின் (கண்ணம்மை என்ற சொல்லை மட்டக்களப்பு நாட்டார் கண்ணம்ம என்றே உச்சரிப்பர்) ஞாபகமாகப் பிரதி செய்து வைக்க "சுரதி நூல்" முறை என்ற நூலைத் தெரிவு செய்ததிலிருந்து இந் நூல் மட்டக்களப்பில் நன்கு அறியப்பட்டதாகவும் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்க முடிகிறது ".

இதுவரை கூறியவற்றிலிருந்து மட்டக்களப்புப் பிரதேசத்திலே உயர்கல்வி பாரம்பரியம் நிலவி வந்துள்ளதென்பதும் புலப்படுகின்றதெனலாம். (தொடரும்)

தொடர்ச்சி...

## இரா.துரைரத்தினத்தின் கவனத்திற்கு...

வேண்டும் என கிழக்குத்தமிழர் ஒன்றியம் என்ற அமைப்பு முயற்சிகளை எடுத்திருத்தது. அந்த அமைப்பில் எந்த அரசியல் கட்சிகளையும் சாராத நடுநிலையானவர்கள் ஏற்பாட்டாளர்களாக இருந்திருந்தால் சிலவேளை வெற்றியளித்து இருக்கலாம்' என குறிப்பிட்டுள்ளார்.

நடுநிலையாளர்கள் என்று அவர் யாரை கருதுகிறார் என்ற கேள்வி மீண்டும் எழுகிறது. எந்த அரசியல் கட்சியையும் சாராமல் தான் உண்டு, தன் வேளை உண்டு, தன் குடும்பம் உண்டு என்று எந்த சமூக சோலிகளுக்கும் போகாமல் இருக்கும் நடுநிலையாளர்கள் கிழக்கு தமிழர் ஒன்றியம் போன்ற சவால்களை எதிர்நோக்கும் அமைப்பு ஒன்றினை உருவாக்க முனைவார்களா? அப்படி உருவாக்கினாலும் அதனை வினைத்திறனுடன் கொண்டு செல்வார்களா?

கிழக்கு தமிழர் ஒன்றியம் உருவாக்கப்பெற்று இன்னும் ஓராண்டு கூட பூர்த்தியாக வில்லை அதற்குள் அது வெற்றியளிக்கவில்லை என்ற அனுமானத்திற்கு அவசரப்பட்டு ஏன் இரா.துரைரத்தினம் வருகிறார். அவரது எழுத்துக்களை பார்க்கும் போது கிழக்கு தமிழர் ஒன்றியம் பற்றி ஒரு பிழையான விம்பத்தை வாசகர்களின் மனதிலே கட்டமைக்க வேண்டுமென்றே முயல்கிறார் போல தெரிகிறது. தமிழரசுக்கட்சிக்காரர்களை போல் அவருக்கும் கிழக்கு தமிழர் ஒன்றியம் கசக்கிறது போலும். கிழக்கு தமிழர் ஒன்றியம் கட்சி அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் கிழக்கு தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதற்கான அமைப்பாகும். அதன் கதவுகள் எல்லா கட்சிக்காரர்களுக்கும் மட்டுமல்ல கட்சி அரசியல் சாராத கிழக்குத்தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டில் அக்கறை கொண்ட ஆர்வலர்கள் அனைவருக்கும் கூட எப்போதுமே திறந்துள்ளன. ஆனால் கிழக்கு தமிழர் ஒன்றியத்துக்குள்ளே தனிப்பட்ட கட்சி அரசியலுக்கு இடமில்லை.

தனிநபர்களுக்கான கட்சி ஒன்றிற்கான அரசியலை புறந்தள்ளி மக்களுக்கான அரசியலை திசைகாட்டுவது கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் அரசியலாகும். இதனை இப்போதாவது தெளிவாகப் புரிந்து கொண்டு இரா. துரைரத்தினம் அவர்கள் எதிர்காலத்தில் கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் உருவாக்கத்தையும் நோக்கத்தையும் நலினப்படுத்தாத வகையில் - கொச்சைபடுத்தாத வகையில் தனது பேனா மையை பயன்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

தொடர்ச்சி...

## தந்தை எவ்வழியோ தனயர்களும் அவ்வழியே!

கேட்டிருந்தார். இதுவே அவர் கட்சியிலிருந்து தூக்கி எறியப்படுவதற்கு முக்கிய காரணியாகும்.

தற்போது தமிழர் கூட்டமைப்பு ரணிலுக்கு சார்பாக வாக்களிப்பதென்றும்! நடுநிலைமை வகிப்பது அராஜகம் என்றும் கூறியுள்ளது.

2005ம்ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் நடுநிலைமை வகிக்க வேண்டுமென மக்களிடம் கோரிக்கை விட்டு ரணிலை ஜனாதிபதியாகவிடாமல் தடுத்து, மகிந்தவை ஜனாதிபதியாக்கினார்கள். அதற்காக தேசியத்திற்கென பலகோடிகள் கைமாறியதாக ஊடாகங்கள் அந்நேரத்தில் செய்திகளை பலவாறாகத் தந்திருந்தன. அக்கால கட்டத்தில் அம்முடிவு ஏனோ அராஜகமாகத் தெரியவில்லையென்று இப்போது மக்கள் விசனிப்பது தெரியாமலில்லை.

முன்பு சிதறுண்டு கிடந்த தமிழ் கட்சிகளை 2001.10.20ல் ஒன்றிணைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்க ஏதுவாக இருந்தவர்கள் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்க உறுப்பினர்கள். அவர்களில் மூத்த ஊடகவியலாளர் இரா.துரைரெத்தினம் அவர்கள். எஸ். வியாழேந்திரனின் இம்முடிவு கிழக்கு மண்ணைக்காக்க முடியுமானால் நன்மையே என்றும், "வியாழேந்திரன் அமைச்சுப்பதவி பெற்றது தவறு என நான் சொல்ல மாட்டேன்" என தன் எண்ணத்தை பிரதி பலித்துள்ளார். பாராளுமன்றம் கூடிய பின்பு என்ன நடக்கிறதென்று பார்ப்போம்.

தொடர்ச்சி...

## கிழக்கிலங்கையின் பழங்குடிகள் அல்லது பூர்வ குடிகள்

பற்றிக் குறிப்பிடுகையில், "குருகுலத்தில் அண்டிய நாகர்", "அத்திநாடதனால் மீண்டு இலங்கை சேர்ந்து வாழ்ந்தனர்" என்று குறிப்பிடுகிறது. கலிகடந்து தெண்ணூறாண்டில் இலங்கையில் நாகர் வலியர் இயக்கரோடு கலந்தவர், மரபொன்றாகி நலிவில்லா நிருபஞ் செய்து நகரெலாம் இறைகளென்ன உகந்த மென்னும் நகரத்திலுறைந்தார் என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிடுவது, முக்கியமானதொரு விடயமாகவே கொள்ளப்பட வேண்டியதாகிறது.

அண்மைக்காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள தொல்லியல் தலங்களில் நடைபெற்ற மேலாய்வுகள் நாகர்கள் பற்றிய பெருமளவிலான தகவல்களைத் தந்துள்ளன. இவ்வாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, இயக்கரும் நாகரும் கி.மு. 500 ஆம் ஆண்டு முதலாக மட்டக்களப்பு பிரதேசத்திலே கலந்து வாழத்தொடங்கினர், என்றும் 'கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் நாகரின் குடியேற்றங்களும் செல்வாக்கும் எழுவான் கரையிலும் படுவான்கரையிலும் பரவியிருந்தன என்று கொள்ளலாம்.' என்றும் குறிப்பிட்டிருக்கிறார் சி.பத்மநாதன் அவர்கள். மட்டக்களப்பில் வாழ்ந்த நாகர்கள் பற்றிய ஆய்வு தனியாக அமையும் அளவிற்கு முக்கியமானதும் விரிவானதுமாகும். திமிலர் மட்டக்களப்பில் பண்டைக்காலத்தில் இருந்து வாழ்ந்து வருகிற ஒரு சமூகப்பிரிவினர் என்ற வகையில் அவர்கள் இப்பிரதேசத்தின் பழங்குடியினராவர். மட்டக்களப்பு பூர்வு சரித்திரத்தில் 'இயக்கர் என்னுந் திமிலர்' என்ற குறிப்பும் காணப்படுகிறது. சங்க காலத்தில் திமிலர் எனும் மீனவர்கள் வாழ்ந்தமை பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் உண்டு. "திமிலர் என்பவர்கள் சங்ககாலம் தொட்டே தமிழகத்தில் இருந்த மீனவர்கள் குடிகள் ஆவர். திமில் என்பது சங்க காலத் தமிழர் பயன்படுத்திய கடல் நீர் கலங்களுள் ஒன்றாகும். இக்கலத்தை ஓட்டியவர்கள் திமிலர்கள்." என்ற தகவலை விக்கிபீடியாவில் காணக்கிடைக்கிறது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் வேறு சில பண்டைக்காலச் சமூகங்கள் பற்றியும் குறிப்பிடுகிறது. ஆடகசவுந்திரி ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த எயினர், நூற்றெட்டு பூதங்கள் பற்றி குறிப்புக்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. எயினன், உன்னாசகிரியிலுள்ள குறுநில எயினன் எனக்குறிப்பிடுகிறான்.சங்க இலக்கியமான பெரும்பானாற்றுப் படையில் வருணிக்கப்படுகிற வேடர் குடும்பம், எயினர் குடும்பமென்று குறிப்பிடப்படுகிறது. இப்பெயர் பாலையோடு தொடர்புடையது எனச் சிவத்தம்பி அவர்கள் தரும் விளக்கம் எயினன் சங்ககாலச் சமூகத்தைச் சார்ந்தவன் என்பதனைக் காட்டுகின்றது. நூற்றெட்டு பூதங்கள் யானையைப் போன்ற தேகமுடையவர்கள், முற்காலத்தில் இராவணேஸ்வரன் நிகும்பலயாகஞ் செய்ய அதிலுண்டாகிய பூதங்கள் எனவும், அவர்கள் வசித்த குகைக்கருகான இடமெல்லாம் செந்நெல் முத்துக்கோதுகள் பிரமாண்டமாய்க் குவிந்து கிடக்கின்றன என்பன போன்ற தகவல்கள் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிரதேசம் பற்றிய ஆரம்பகால நூல்களில் கூறப்பட்டுள்ள பழங்குடியினர் அல்லது பூர்வ குடியினர் பற்றிய விபரங்களை பார்த்தோம். இதற்கப்பால், மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள தொன்மையான கிராமங்களையும், தொன்மையான கோயில்களையும் உருவாக்கியவர்களாகக் கருதப்படுகின்ற வேடர்கள் குறித்த ஐதீகக் கதைகள் குறித்து நோக்க வேண்டும்.

# கந்தசஷ்டி விரத ஆரம்பம்.
# அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்.
# பதுளை வீதி, புலையவெளி.



ஆரம்பம்:- 08/11/2018 - வியாழக்கிழமை.
13/11/2018 - செவ்வாய்கிழமை.

ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் சஷ்டி வரையுள்ள 06 நாட்களும் இவ் விரதம் அனுஷ்ட்டிக்கும் காலமாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப்பெருமானை வழிபட்டு சிறிதளவு நீர் மட்டும் அருந்தி 06 நாளும் உபவாசம் இருந்து 07ம் நாள் சிவனடியார்களுடன் பாரணை செய்வது இவ் விரதத்தின் நியமமாகும். சூரபத்மனை முருகன் சம்காரம் செய்த நாளும் இதுவே ஆகும்.

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ ஜெயக்குமார் ஐயா
திருகோணமலை

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management:
0203 500 0239

## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management
- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management